பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 25 வியாழக்கிழமை (09.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 225

# தேர்தல் வரை காத்திராது தீர்வை உடன் முன்வைக்குக!

## ஜனாதிபதியிடம் தமிழ்க்கூட்டமைப்பு வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 09

தமிழ் மக்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு - ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை காத்திருக்காமல் - அதற்கு முன்பாக, உடனடியாக அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு முன்கொண்டு செல்லும் அரசியல் தீர்வுத்திட்ட நடவடிக்கைக்கு மாத்திரமன்றி, அனைத்து நல்ல நடவடிக்கைகளுக்கும் கூட்டமைப்பு முழுமையான ஆதரவைத் தரும் என்றும் கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் யாழ்.கோட்டையை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயம் மேற்கொண்ட இந்தியத்தூதர் அலோக் பிரசாத் நேற்று யாழ்.கோட்டை மற்றும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் சென்றார்.

நேற்றுக்காலை மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீடத்துக்கு சென்ற தூதர் அங்கு துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடினார். அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் யாழ்.நகரப்பகுதியையும், கோட்டைப் பகுதியையும் அவர் பார்வை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் இருவர் இன்று யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

செயலகத்தில் காலை 9.30 மணிக்கு யாழ். வணிகர் சங்கத்தினரையும் தொடர்ந்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் அமைச்சர்கள் சந்தித்து கலந்துரையாடுவர்.

அதன் பின்னர் கைதடி சித்த ஆயுள் வேத வைத்தியசாலைக்கும் அமைச்சர்கள் செல்வர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சவூதி அரேபிய நிவாரணப் பொருள்கள் நேற்று கொழும்பை வந்தடைந்தன

கொழும்பு, ஜூலை9

வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்காக சவூதி அரேபிய அரசு வழங்கிய மனிதாபிமான உதவிகளில் முதல் தொகுதி நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

1000 கூடாரங்கள் மற்றும் அத்தியாவசிய

(16 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்

நாளை

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான 4 பக்கங்கள் கொண்ட மாதிரி வினாத்தாள்கள் (இணைப்பு)

★அசேதன இரசாயனம்! ★பௌதீகவியல்!
★வணிகக்கல்வி I ★பொருளியல் II

## பொதுமக்கள் போக்குவரத்துக்கு ஏ-9 வீதி விரைவில் திறக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஏ-9 வீதி ஊடாகப் பொதுமக்கள் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ், இன்னும் சில தினங்களில் இப்போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு ஐந்து சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி ஐந்து சொகுசு பஸ்கள் புறப்படும். அதேவேளை, கொழும்பில் இருந்தும் ஐந்து சொகுசு பஸ்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்.

தற்போது யாழ். குடாநாட்டு மக்கள் விமானம் மூலமும் கப்பல் மூலமும் பிற மாவட்டங்களுக்கான பயணங்களை மேற்கொள்வதிலுள்ள பெருந்தொகைப் பணச் செலவு, வீண் காலதாமதங்கள், சிரமங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, ஏ- 9 பாதையூடான் பயணிகள் போக்குவரத்துச்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் விஷமத்தனமான செயற்பாடுகளை தடுக்க உடன் தமக்கு அறிவிக்க அமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

மக்கள் மத்தியில் அநாவசியமான பதற்ற நிலையை உருவாக்கும் நோக்கில் சிலர் விஷமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவை குறித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக அச்செயற்பாடுகள் குறித்துத் தமக்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பொது மக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புலித்தலைமையாலும் புலிகளின் பெயராலும் இடம்பெற்று வந்த வன்முறைச் சம்பவங்கள் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் சிற்சில இடங்களில் சில நேரங்களில் விஷமத்தனமான செயற்பாடுகள் சில இடம்பெற்று வருவதாக அறியக் கிடைக்கின்றது. இவ்வாறான மக்கள் விரோதச் செயல்களை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அவ்வாறான சம்பவங்கள் தொடர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள் சொன்னதெல்லாம் பொய்; ஆயிரம் மக்களே வன்னியில் பலியாகினர்

### சி.ஐ.டியின் காவலில் உள்ள வைத்தியர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

வன்னியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நடந்த யுத்தத்தில் - கடைசி வரைக்கும் - ஆயிரம் பேர் வரையிலான பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்றும் - தாங்கள் முன்னர் முல்லைத்தீவிலிருந்து ஊடகங்களுக்குத் தெரிவித்த தகவல்களும் புள்ளி விவரங்களும் பொய்யானவை என்றும் - அங்கு பணியாற்றி, தற்போது இரகசியப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற வைத்தியர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

வன்னியில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் - இறுதியாக பொது மக்கள் அங்கிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்ட, கடந்த மே மாதம் 17ஆம் திகதிவரை - அங்கிருந்து பணியாற்றிய வைத்தியர்களான வரதராஜன், சண்முகம், சத்தியமூர்த்தி, சிவபாலன், இளஞ்செழியன் ஆகியோரே மேற்படி தகவலைத் தெரிவித்திருக்கின்றனர்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனி மாதம் 25 ஆம் திகதி (09.07.2009) வியாழக்கிழமை காலை 7.28 மணி தொடக்கம் 8.58 மணிவரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்க விருக்கும் கிருபா லேணர்ஸ் (சாரதி பயிற்சிப் பாடசாலை)

என்னும் நிறுவனத்தை திறந்து நடத்த இறையருள் துணைகொண்டு இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து நிறுவனத்தை வாழ்த்தி விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.





226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (பாரத் ஸ்ருடியோ அருகில்)

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு.திருமதி A.கிருபாகரன்
T.P 077 7225292, 021 222 4353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெற்றிவாகை சூடிவரும் யூனியன் கல்லூரி அணிகளுக்கு தெல்லிப்பழையில் வரவேற்பு

வலி.வடக்கு, ஜூலை 9

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மூன்று அணிகளும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. வெற்றிவாகை சூடிவரும் வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனைகளை இன்று தெல்லிப்பழை மல்லாகம் லயன்ஸ் கழகத்தினர் தெல்லிப்பழையில் வைத்து வரவேற்கவுள்ளார்கள். (203-86)

## சேதமடைந்த ஆலய சேத விவரம் கோரப்படுகிறது

நவாலி, ஜூலை 9

வடக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் சேதமடைந்த ஆலயங்களை புனரமைக்க விவரங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

ஆலயத்தின் பெயர், பிரதேச செயலர் பிரிவு, திணைக்களத்தில் செய்யப்பட்ட பதிவின் இலக்கம், புனரமைப்புக்கான உத்தேச மதிப்பீடு, வரைபடம் ஆகியவற்றுடன் இன்று அனுப்புமாறு திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் கேட்டுள்ளார். (1-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியில் 13 வருடங்கள் ஆசிரியராக அருஞ்சேவையாற்றியதோடு சமூக விஞ்ஞானமன்ற பொறுப்பாசிரியராகவும் சிறப்பாகப் பணிபுரிந்த

**திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை**

அவர்கள் யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்திற்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
சமூக விஞ்ஞான மன்றம்.

## வாடகைக்கு

இல.186, கஸ்தூரியார் வீதியிலுள்ள 3 கடைகளடங்கிய கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு 0776153563

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகலவிதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
இல.06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி K.K.S.றோட். T.P.: 021 222 8680

## தேவை

வான் சேல்ஸ் (விற்பனையாளர்) தேவை. உடன் நேரில்வரவும். (தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது).

118, றொலக்ஸ் பேக்மார்ட்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

504A, நாவலர் வீதி, கச்சேரி, நல்லூர்ச் சந்திக்கு அருகில் கடையுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0602214688/ 0212229119
0775184725/ 0775999746
(86869)

## கடை வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில்
(பஸ் நிலையம் முன்பாக)
விசாலமான கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 2844227

## கண்ணீர் அஞ்சலி

யா/கைதடி குருசாமி வித்தியாலயத்தின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி சோதீஸ்வரி நாகராசா அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி கமலம் கதிராமன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்,
கைதடி வடக்கு. அதிபர், ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் S.ஜெயபாலன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லையா பூமாதேவி**

அவர்கள் 07.07.2009 அன்று காலமான செய்தி அறிந்து பெரும் துயருறுவதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி சமுர்த்தி வங்கி
முகாமையாளரும், சக உத்தியோகத்தர்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றி உப அதிபராக, அதிபராகப் பதவி உயர்வுபெற்று யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மைந்தனாகப் பல வருடங்கள் பணி செய்து தென்மராட்சி வலயத்தின் சாவகச்சேரிக் கோட்டத்தில் கோட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

**அதிபர் திரு. கு.சிவானந்தம்**

அவர்கள் இனிவரும் காலங்களில் எம் மாணவர்களின் நலன்களில் பல சாதனைகளைப் புரிந்து மேலும் பதவி உயர்வு பெற்று பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்,
கைதடி வடக்கு.
அதிபர்,
ஆசிரியர்கள்.

## இந்தியாவில் படியுங்கள் @ பிரிந்தாவன் கல்லூரி

B.Sc
B.B.M.
B.C.A.
B.Com.

பங்களூர்
பல்கலைக்கழகத்துடன்
இணைந்தது

2 A/L சித்தியுடன் இணைக
ஜூலையில் பாடங்கள் ஆரம்பம்

மேலதிக விவரங்களுக்கான
தொடர்பு: 0777 317043

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியர் செ.ஜெயரூபன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லையா பூமாதேவி**

அவர்கள் 07.07.2009 அன்று காலமான செய்தி அறிந்து பெரும் துயருறுவதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாவற்குழி மகா வித்தியாலயம். அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

## Brown & Company PLC Office Automation

வடக்கின் செழுத்தில்
யாழ்.மண்ணில் உங்களுடன் புதிதாக இணையும்
DIGITAL ELECTRONICS
அனைத்து வகை SHARP அலுவலக சாதனங்கள்
(Photo Copiers, Projectors, Fax Machines, Cash Registers, Toners)

விசேட விற்பனை




★ 25,000 பிரதிகள் எடுக்கக் கூடிய Toner இலவசம்.
★ 01 வருடம்/ 50,000 பிரதிகள் உத்தரவாதம்
★ முதல் வருடத்திற்கு இலவச சேவை.

✱ நீங்கள் கொள்வனவு செய்யும் புதிய நிழற்பிரதி இயந்திரத்துடன் 25,000 ரூபா பெறுமதிமிக்க CDMA தொழில்நுட்பத்திலும் இயங்கக் கூடிய தொலை நகல் இயந்திரம் (Fax machine) முற்றிலும் இலவசம்.

✱ எம்மிடம் 3,000/= பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 1ஆம், 2 ஆம், 3 ஆம் அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே 3,000, 2,000, 1,000 ரூபா பெறுமதியான பரிசுகள் அல்லது அடுத்த உங்களது கொள்வனவில் விலைக் கழிவுகள்.

"விற்பனைக்கு பிந்திய தரமான சேவை வழங்குநர்கள்"

Authorized Dealers:-
Digital Electronics
62/16, Stanley Road,
Jaffna.

அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்
டிஜிரல் எலக்ரோனிக்ஸ்,
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தொடர்புகளுக்கு: 021 222 [illegible]

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து வலயக்கல்வி அலுவலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I, அல்லது இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் I ஐயுடைய பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகள் அல்லது இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II ஐயுடைய பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இவ்வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலராக நியமிக்கப்பட்டதையடுத்து பதவி வெற்றிடம் ஏற்பட்டமை [illegible]. (203-207)

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னலட்சுமிப்பிள்ளை சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)



வரணி, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வளாக வீதி, திருநெல்வேலியில் வசித்து வந்தவருமாகிய திருமதி அன்னலட்சுமிப்பிள்ளை சண்முகநாதன் 06.07.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டநாதர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குலநாயகத்தின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரியின் அன்பு மைத்துனியும் சுகந்தி (ஆசிரியை - யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்), ஜெந்தி (அவுஸ்திரேலியா), உசாநந்தி (திட்டமிடல் நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தாயும் முகுந்தன் (ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), பிரபாகரன் (அவுஸ்திரேலியா), மோகனராஜ் (ஆசிரியர், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் தருசிகன், ஹம்சாயினி, ரகுராமன், பிரிந்தன், ஜனகன், கிரிசன், கவிந்நயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க.செ.முகுந்தன்,
வளாக வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## FACULTY OF MEDICINE

Date of Commencement of Academic Programme for the 30th (2007) Batch

The Academic Programme for the 30th (2007) Batch (Term I) will Commence on 20th July 2009.

Registrar.
2009.07.08
(C/559423)

## General Information & Communication Technology
## CERTIFICATE COURSES

MS Office, Visual Basic, C++, Photo Shop, Corel Draw, HTML, Java, Java Script, Macromedia Flash, Web Multimedia, Hardware Technology, Simply Accounting (ACCPACK) & All Certificate courses

**Kids Programming for Gr 6, 7,8 & Gr9**
Basic Computer Knowledge , MS Office, Paint, Visual Basic, Photo Shop, Corel Draw,
By Miss.K.S.Jinu
Individual & Group Classes (Fully Computerized Classrooms)

IECE 121/1. அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊழல், முறைகேடுகள், மோசடிகளை ஒழிக்கத் திடசங்கற்பம் வேண்டும்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசு வெற்றியீட்டியதோ, இல்லையோ நாட்டில் மற்றொரு முக்கிய யுத்தத்தில் அரசு பின்னடைவு கண்டு வருவதை ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதியின் ஆலோசகரும் சட்டத்தரணியுமான வாசுதேவ நாணயக்காரா ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஊழல், மோசடி, முறைகேடுகள் நாட்டில் மலிந்துவிட்டன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் அதனால் நாடு பெரும் பின்னடைவை - மோசமான பாதிப்பை - எதிர்கொண்டிருப்பதாகவும் தெரிவித்து எச்சரிக்கை மணி ஒலித்திருக்கின்றார்.

நாட்டின் நிர்வாகத்தில் ஏற்பட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி ஊழல், மோசடி, முறைகேடுகள், தில்லுமுல்லுகள், குளறுபடிகள் என்பன பல்கிப் பெருகிவிட்டன. தோராயமாக இருபது ஆண்டு காலத்தில் - 1985 முதல் 2005 வரை - சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாகை இவ்வாறான - தவறான -செயற்பாடுகளினால் நாடு இழந்திருக்கின்றது என்ற அதிர்ச்சித் தகவலையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தக் காலப் பகுதியில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கக் கூடிய பல துறைகளைப் பட்டியலிட்டுள்ள அவர் நாட்டுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ள இந்த மோசடிகள் குறித்து விசாரணை நடத்தவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான சிபாரிசுகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தாம் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் விவரித்திருக்கின்றார்.

இத்தகைய பெரும் மோசடிகள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான - விரிவான - அதிகாரங்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல், இதற்கு மேலதிகமாக இவ்விடயங்கள் குறித்து விசாரித்து உரிய சிபாரிசுகளை வழங்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றார் அவர்.

நாட்டின் நலனில் அக்கறையோடு வாசுதேவ நாணயக்கார இவ்விடயங்களைச் சுட்டிக்காட்டி, அம்பலப்படுத்தி, குரல் கொடுத்திருக்கின்றமை வரவேற்கத்தக்கதே.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற அரச சொத்துக்களைத் தனியார் மயப்படுத்துவதில் பெரும் ஊழல், மோசடிகள் இடம்பெற்றன எனத் தெரிவித்து அவர் உயர்நீதிமன்றத்துக்குச் சென்றதால் அந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது. அந்த நிறுவனத்தை அரசு மீளப் பொறுப்பேற்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிடும் அளவுக்கு - உரிய நியாயம் கிட்டும் வகைக்கு - நிலைமை முன்னேற்றம் கண்டது. இதே போன்று துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பெரும் விஸ்தீரணமான காணி தனியார் நிறுவனத்துக்குக் கையளிக்கப்பட்ட விடயத்தில் இடம் பெற்ற முறையற்ற கையாளுகை நீதிமன்றம் மூலம் அவரால் வெளிப்படுத்தப்பட்டு, தேசத்துக்கு ஏற்பட்ட முறையற்ற சேதம் பின்னர் சரி செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த வகையில் வாசுதேவ நாணயக்காராவின் பொது நலன் நோக்கிய நடவடிக்கைகளும், முயற்சிகளும் பாராட்டத்தக்கவையாக அமைந்தாலும் மற்றொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

1985 முதல் 2005 வரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளால் தேசத்துக்கு ஏற்பட்ட இழப்பு ஒரு லட்சம் கோடி ரூபா வரையில் இருக்கும் என்று தோராயமாகக் கணக்கிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், அதற்குப் பின்னர் நாட்டில் ஊழல், மோசடி, முறைகேடுகள், நிர்வாகத் தில்லு முல்லுகள் இடம் பெற்றனவா என்ற விடயத்தில் அதீத மௌனம் காக்கின்றமை கவனிக்கத்தக்கது.

2005 நவம்பரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஆட்சிக்கு வந்து மூன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. அந்த ஜனாதிபதியின் ஆலோசகராகத் தான் பதவி வகித்துக் கொண்டு, அத்தகைய அரசின் நிர்வாகத்திலும் ஊழல், மோசடிகள் நீடிக்கின்றன என்று தம்மால் பகிரங்கமாகச் சுட்டிக் காட்ட முடியாது என்ற காரணத்தால் அவர் இவ்விடயத்தில் அசாதாரண மௌனம் பேணுகின்றாரோ தெரியவில்லை.

நாட்டை பெரும் நிதி இழப்புக்குள் ஆழ்த்திய - எரிபொருள் கொள்வனவு தொடர்பான - 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் இந்தக் காலப்பகுதியில்தான் இடம் பெற்றது என்பது மறக்கற்பாலதல்ல.

பொது நிறுவனங்கள் பலவும் ஊழல் செயற்பாடுகளால் முறிந்து போக அதனால் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படும் அளவுக்கு வர்த்தகத்துறையில் குழப்பம் விளைந்ததும் இந்தக் காலப்பகுதியில்தான்.

அதுபோல, முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்றமை எனக் கூறப்படும் முறைகேடுகள், ஊழல்கள் போன்றவற்றோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பல உயர் அதிகாரிகள் இன்னும் - இந்த அரசின் கீழும் - நிர்வாகத்தில் முன்னிலைமையும், அதிக அதிகாரமும் வழங்கப்பட்டு முன்னிறுத்தப் பட்டிருக்கின்றார்கள் என்பதும் மறைக்கக் கூடியதன்று.

நாட்டைப் பீடித்து உலுக்கிக் காலம் காலமாய் அழிவு, நாசத்தைத் தந்து வரும் கொடிய நோய்களே ஊழல், முறைகேடுகள், மோசடிகள் போன்றவையாகும்.

நல்லாட்சி ஒன்றை நிறுவுவதாயின் முதலில் இந்த நோய்களை அடியோடு ஒழிக்கும் திடசங்கற்பம் ஆட்சித் தரப்புக்கு - ஆட்சித் தலைமைக்கு - வரவேண்டும். சுற்றம், சூழ இருப்பவர்கள் என்று பார்க்காமல் நீதியை நிலைநிறுத்தி, நியாயத்தைப் பேணுகின்ற பண்பியல்பு ஆட்சித் தலைமைக்கு இருக்குமானால் மட்டுமே இது சாத்தியமாகும்.

# குடாநாடு யுத்தத்தினால் கடுமையாகப் பாதிப்புற்றுள்ளது; அதன் அபிவிருத்திக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம்

## சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள்குழு தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்.குடாநாடு யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்திப்பணிகள் நடைபெறாத நிலையில் உள்ளது. எனவே சகல துறைகளையும் உள்வாங்கி இங்கு உட்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்தியாவின் பங்களிப்பும் அவசியமாகும், இது பற்றி இந்தியா ஆராய வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியத் தூதுவர் அலோக்பிரசாத்தை யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு இப்போது விஜயம் மேற்கொண்டமைக்காக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்தியத் தூதுவருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக இந்தியா அதிக கவனம் செலுத்தவேண்டும் என சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள குழுவின் பிரதி நிதிகள் வலியுறுத்தினர்.

அவை வருமாறு:

* இடம்பெயர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முகாம்களில் உள்ள மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு இந்தியாவும் உதவி புரிய வேண்டும். இந்த விடயத்தில் இந்தியா கவனத்தில் எடுக்க வேண்டும்.
* முல்லைத்தீவை உயர்பாதுகாப்பு வலயமாக அரசு அறிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதையிட்டு நாம் மிகுந்த கவலையடைகின்றோம். இதனால் அந்தப் பகுதி மக்கள் அங்கு போய்க் குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
* யாழ். குடாநாடு யுத்தத்தினால் கடுமையாகப் பாதிப்புற்றுள்ளது. எனவே இங்கு சகல துறைகளையும் உள்வாங்கி உட்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* தமிழர்களின் கலாசாரப் பாரம்பரியங்களைச் சித்தரிக்கும் வகையில் அமைந்திருந்த யாழ். நகர மண்டபம் யுத்தத்தினால் தரைமட்டமாகியுள்ளது. எனவே இதனை நவீன கீழைத்தேய கலை வடிவங்களைக் கொண்ட மண்டபமாகக் கட்டியெழுப்ப உதவி புரியவேண்டும்.
* தமிழர்களைப் பொறுத்தவரையில் தற்போது ஒரு தலைமை இல்லாத நிலையில் உரிமையைப் பெற முடியாமல் உள்ளனர். எனவே அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழர்கள் தமது அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் உரிமைகளைப்பெற இந்தியா உதவவேண்டும்.
* புராதன கிராமங்கள் பல அழிந்து செல்கின்றன. அங்கு மக்களை மீண்டும் குடியமர்த்தினால் அவற்றைப் பாதுகாக்கமுடியும். இந்த விடயத்தில் இந்தியா தலையிட்டு அக்கிராமங்களைப் பாதுகாக்கவும், அங்கு மக்களை மீளக்குடியமர்த்தவும் தனது பங்களிப்பை வழங்க வேண்டும்.

வன்னியில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின்போது அங்கு சிக்கியிருந்த மக்களை மீட்க உதவுமாறு மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மறை மாவட்டங்களின் ஆயர்கள் தன்னைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தமையை இந்தியத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது நினைவு படுத்தியதாக யாழ். ஆயர் தெரிவித்தார். (50)

## இலகு வேலைக்கான உணவுத் திட்டத்தின் பணிகள் இன்று குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை9

இலகு வேலைக்கான உணவுத் திட்டத்தின் பணிகள் இன்று வியாழக்கிழமை குடாநாட்டில் ஆரம்பமாகவுள்ளன.

கடந்த காலத்தில் தொழில் பாதிப்புற்றவர்களுக்காக வழங்கப்பட்ட உலக உணவுத் திட்ட நிவாரணம் கடந்த மாதம் முதல் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலகு வேலைக்கான உணவுத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

11 பிரதேச செயலகங்களிலும் 4 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் இந்த இலகு வேலைத் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 51 ஆயிரத்து 739 குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களை பெற்றுவந்த குடும்பங்கள் இந்த வேலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. (50-68)

## தென்மராட்சி நலன்புரி நிலையப் பாடசாலைகளில் உயிரியல் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை

### இதனால் பரீட்சை எழுத முடியாத நிலையில் மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் இயங்கும் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் உயிரியல் போதிக்கும் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்.மாவட்டப் பாடசாலை களில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் ஆசிரியர்கள் நலன்புரி நிலையப் பாடசாலைகளில் கடமையாற்ற நியமிக்கப்பட்டபோதிலும் உயிரியல் பாட ஆசிரியர்கள் இன்னும் கடமைக்குச் சமுகம் அளிக்காமையால் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில், இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலைகளின் மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப்பாடசாலைகளின் 2010, 2011 ஆகிய வருடங்களில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் உயிரியல் பாட ஆசிரியர்கள் இல்லாத நிலையில் ஏனைய பாடங்களைப் படிப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள பரீட்சைக்குத் தயார் செய்யும் விதத்தில் உரிய ஆசிரியர்களை நியமிக்க உரிய அதிகாரிகள் ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (50-207)

## அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ்.வர்த்தகர்களைச் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை9

குடாநாட்டுக்கு இன்று விஜயம் செய்யவுள்ள வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன குடாநாட்டு வர்த்தகர்களை இன்றுகாலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

குடாநாட்டு வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே வர்த்தகர்கள் அனைவரையும் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் ஒன்றுகூடுமாறு யாழ்.வர்த்தக சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (50-203)

## கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 9

மாவட்டக் கலை, கலாசாரப் பேரவையின் கலைஞர் விவரத்திரட்டு தொகுதி I நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு மாவட்ட கலை கலாசாரப் பேரவை கேட்டுள்ளது.(50-203)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 26 | 10.07.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.இ. 08.43 வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | கா 07.09 வரை |
| சுபநேரம்: | 05.58 - 07.28 |
| இராகுகாலம்: | 10.28 - 11.58 |

## இரத்மலானை - பலாலி விமானசேவை கட்டணக்குறைப்பு தொடர்பான மாநாடு

கொழும்பு,ஜூலை 9

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையிலான தனியார் விமான சேவையின் கட்டணக் குறைப்பு தொடர்பான மாநாடு நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இரத்மலானை - பலாலி விமான சேவையின் கட்டணத்தைக் குறைப்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன விமானக் கட்டணத்தைக் குறைக்குமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டிற்கு எக்ஸ்போ, டெக்கான், மனோஜ் ஆகிய தனியார் விமான சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (50)

## கடலுணவுகளை தென் பகுதியில் சந்தைப்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 9

24மணிநேர கடற்தொழிலுக்கு குடாநாட்டில் அனுமதி வழங்கப்படதன் பின்னர் கடல் உற்பத்திகள் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் அவற்றைத் தென்பகுதிக்கு அதிகளவில் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற் கொண்டுள்ளார்.

கடல் வலயத் தடைச்சட்டம் அமுலில் இருந்த கடந்த பல வருட காலமாக பலத்த பாதிப்புகளுக்கு உட்பட்டிருக்கும் யாழ். கடற்றொழிலாளர்களின் நிலைமைகளை கருத்திற் கொண்டு தற்போது அவர்களது உற்பத்திப் பொருள்களை அதிகளவில் தென் பகுதியில் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கையை அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு நியாய விலையிலும் தரமாகவும் கடல் உற்பத்திகள் கிடைக்கக் கூடிய சூழலை உருவாக்குவதும் மேலதிக் கடல் உற்பத்திகள் அனைத்தையும்தென் பகுதியில் சந்தைப்படுத்துவதுமே அமைச்சரின் திட்டத்தின் நோக்கமாகும்.

இதேநேரம் கடற்றொழிலில் ஈடுபடுவதில் மேலும் சிரமங்கள் தடைகள் ஏதும் இருப்பின் இன்னும் சில நாள்களில் அவ் விடயங்கள் தொடர்பில் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி, அப்பிரச்சினைகளைத்தீர்த்து கடற்றொழிலை மேலும் விரிவுபடுத்த அமைச் சர் நடவடிக்கை எடுக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1102 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 14 16 50 51

07-07-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 6,013,100/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 198,784 | 20/- | 3,975,680/- |
| 2 இலக்கங்கள் | 18,212 | 40/- | 728,480/- |
| 1 இல. + லக்கினம் | 18,005 | 60/- | 1,080,300/- |
| 2 இல. + லக்கினம் | 1,721 | 200/- | 344,200/- |
| 3 இலக்கங்கள் | 473 | 1000/- | 473,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,013,100/- | - |
| மொத்தம் | | | 7,731,660/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 237,256 | | 8,231,660/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,457,050/-

ஆலிந்தயே ரண் வாசனாவ

வெற்றியாளர்

பீ.டீ.பீ.எஸ்.லக்மால் விஜேவர்தன

திக்கும்புர, காலி

2009 ஜூலை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| காலி | 400308391-0-20 |
| கம்பஹா | 400309863-3-37 |
| கொழும்பு | 400306697-5-37 |
| மாத்தறை | 400300856-2-42 |
| நுவரெலியா | 400306033-3-40 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# அருள்முருகன் திருமணப் பணியகம்

மிகவும் பொருத்தமான மணமகன் / மண மகளுடன் வருகின்ற தமிழ் மாதங்கள் ஆவணி, ஐப்பசியில் திருமணம் நிறைவேற விரும்பும் பெற்றோர் நேரில் வந்து விவரங்களையும் படங்களையும் வழங்கலாம். இவ் விசேட அறிவிப்பு இரு வாரங்களுக்கு மட்டுமே உரியதாகும். இல: 03. யாழ். வீதி, சிறாம்பியடி லேன், (ஆரியகுளம் சந்திக்கு மிக கிட்டவுள்ள லேன்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:2229334 மணமக்கள் அறிமுக சேவை, பரமேஸ்வரா சந்தி, (Campas சந்தி) திருநெல்வேலி T.P:2229861 (இங்கு சனி, ஞாயிறு உட்பட தினமும் 9.00 - 12.00 மணி வரை சேவைகள் இடம் பெறும்) உரியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(86863)

# திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி
நடத்தும்
## நாடகமும் அரங்கியலுக்குமான இருநாள் கருத்தமர்வு

காலம்: 11, 12 ஜூலை 2009 (சனி, ஞாயிறு)

நேரம்: மு.ப. 9.00 மணி- பி.ப.5.00 மணி

இடம்: கலைத்தூது கலையகம் 285, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

(க.பொ.த.(உயர்தரம்), G.A.Q. போன்றவற்றில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைப் பயில்வோரின் அரங்கியல் அறிவினை ஆழப்படுத்தும் நோக்கோடு, நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரங்கியல் அனுபவமுடைய புலமையாளர்கள் ஆகியோரைக் கொண்டு இக் கருத்தமர்வு நடத்தப்படுகின்றது).

* ஆர்வமுள்ள அனைவரும் இதில் பங்கு பற்றலாம்.
* பயனாளிகளுக்கான அனுமதிக் கட்டணம் 200.00 ரூபா ஆகும்.
* அனுமதிகளை இன்றும் நாளையும் திருமறைக் கலாமன்ற அலுவலகம், கலைத்தூது அழகியல் கல்லூரி ஆகியவற்றிலும் சனிக்கிழமை கலைத்தூது கலையகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமறைக் கலாமன்றம்.**
278, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2393

(சி/559422)

# உடனடியாகத் தேவை

பருத்தித்துறையில் தாய், தந்தையரை இழந்த குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லம் ஒன்றிற்கு பின்வரும் ஆளணி உடனடியாகத் தேவை.

**பொறுப்பாளர் (பெண்)**
இளைப்பாறிய பாடசாலை அதிபர், ஆசிரியை, வைத்தியர், அரசாங்க உத்தியோகத்தர். வயதெல்லை இல்லை. அர்ப்பணிப்பும் கடமை உணர்ச்சியும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**Matron (மருந்தகச் செவிலி)**
குழந்தைகளைக் கவனிப்பதற்கு மருத்துவ அனுபவமுள்ள பெண்கள் தேவை. இளைப்பாறிய தாதியர் விரும்பத்தக்கது.

**பெண் பணியாளர்கள்**
சிறுவர்களைப் பராமரிப்பதற்கு பெண் பணியாளர்கள் தேவை.

பருத்தித்துறையில் தங்கியிருந்து வேலை செய்வது விரும்பத்தக்கது.

லக்ஸ்மி நடராஜா, சிறுவர் கிராமம் உபயகதிர்காமம், புலோலி.
GODS OWN CHILDREN 140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5796, 077 4083656, 077 3627055

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தில் இருதள விமானத்தை
நிர்மாணித்து தெய்வீகச் சிற்பங்களையும்,
தெய்வ வாகனங்களையும்,
தெய்வ அலங்காரங்களையும்
மிகச் சிறந்த முறையில் ஆக்கித் தந்த
எம்மூர் மூத்த கலைஞர்,
சிற்பாசாரியார்

## சரவணமுத்து கணேசமூர்த்தி

அவர்களின் மறைவு குறித்து
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய
கற்பகப் பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்.

(சி/559426)

வட்டு.வடக்கு, சித்தன்கேணி.

தகவல்:
பிரமனாச்சி தோட்ட
கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலை மனு கோரல்

இல.84, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.


பொதுசன பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகள் அமைச்சில் பதிவு செய்துள்ள குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவமுள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 31.07.2009 மதியம் 12 மணிவரை உதவிப்பதிவாளர் நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐநூறு ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலை மனு" என அடையாளமிடப்பட்டு 31.07.2009 பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் **பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பெ.இல.57, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள **விலை மனுப்பெட்டியில்** இடப் படலாம்.

விலை மனுக்கள் 31.07.2009 அன்று பிற்பகல் 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். சம்பளச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாத சம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழக கொள்வனவுச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/559413)

**பதிவாளர்.**

# மரண அறிவித்தல்
## சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன் 07.07.2009 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) மற்றும் திருமதி சின்னத்துரை கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் இறப்பியல்பிள்ளை மொனிக்கம்மாவின் அன்புக் கணவரும் டிமோசிலின், மொறின் ஷாமினா, யூடிற் டிலக்சினி, நியூஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சாந்திமா, வசி, தர்மகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் அரசநாதன், தேவியற்கரசி, அரசகுமார், இராணியற்கரசி, பூவையற்கரசி, அரசதுரை, அரசயோதி, அரசநாயகம், அரசகேசரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெனிஸ்ரன், ரிஷாலினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(86872)

தகவல்:
குடும்பத்தினர்.

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி.மேற்கு பிரதேச சபைக்கு 27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் நூலகம் மற்றும் சந்தை அபிவிருத்திகள் முன்னெடுத்துச் செய்யப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் சு.புத்தி சிகாமணி தெரிவித்தார்.

இதற்கான மதிப்பீடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகிறதாகவும் விரைவில் நிர்மாணப் பணிகளுக்கான வேலைத்திட்டங்கள் துரிதப்படுத்தப்படுமெனவும் சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(203)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில் 22 04 1927

அம்பிகையின் அடியில் 09 06 2009



## அமரர் கணபதிப்பிள்ளை பரமசாமி
(முன்னாள் உரிமையாளர்– பரமராஜா ரான்ஸ்போட் சேர்விஸ்)

திதி: துதியை

உனை குறை சொல்வார் யாருமில்லை
உனக்கு பகை என்றும் எவருமில்லை
அப்படியிருக்க உன் அன்பு மகள்
அருள்மணியிடம் சென்று சேர்ந்ததேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

09.06.2009 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் கணபதிப்பிள்ளை பரமசாமி அவர்களுடைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும் இன்று (09-07-2009 வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

190ம் கட்டை, [illegible]

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழாவின்போது தேர் வீதி உலா வருவதையும் அடியார்கள் அங்கப்பிரதிஷ்டை செய்து அடியழித்து நேர்த்திக்கடன்களை நிவர்த்தி செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நவாலி,ஜூலை9

பன்முகப்படுத்தப்பட்ட 'வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஒன்பது செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான முதலாவது பட்டியல் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறிலின் நிதியிலிருந்து இளவாலை சிறுவர் விடுதிக்குத் தொலைக்காட்சிப் பெட்டி கொள்வனவுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், சில்லாலை சென்.ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுரேஸ் பிரேமச்சந்திரனின் நிதியிலிருந்து பண்டத்தரிப்புப் பெண்கள் சிக்கன கூட்டுறவுச் சங்கத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

கஜேந்திரகுமாரின் நிதியிலிருந்து ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சிறுவர் பாடசாலைக்கு உபகரணங்கள் வாங்குவதற்கென ஐம்பதாயிரம் ரூபாவும், ஆனைக்கோட்டை ஆர்.சி.ரி.எம் பாடசாலைக்கு பாண்ட் வாத்தியம் வாங்குவதற்கு ஒரு லட்சம் ரூபாவும், மானிப்பாய் சென்றஆன்ஸ் பாடசாலைக்கு அலுவலக உபகரணங்கள் வாங்குவதற்கு இருபத்தையாயிரம் ரூபாவும், இளவாலை சென்.ஹென்றீஸ் பாடசாலைக்கு அலுவலக உபகரணங்கள் வாங்குவதற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இளவாலை எச்.எப்.சி. வித்தியாசாலைக்கு அலுவலக உபகரணங்கள் வாங்குவதற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும், மாதகல் ஜோசப் மகாவித்தியாலயத்திற்கு உபகரணங்கள் வாங்குவதற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-100)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பல்கலை. மாணவர்களின் விடயத்தில் கவனம் எடுக்குமாறு டக்ளஸிடம் கோரிக்கை

நல்லூர்,ஜூலை9

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் விடயத்தில் உரிய கவனம் எடுக்கப்படவேண்டும். இல்லாதுவிட்டால் அந்த மாணவர்களின் கல்வி நிலையில் பெரிதும் பாதிப்பு ஏற்படும்.

இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கவலை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போதே துணைவேந்தர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் 34 பேரும் வன்னியில் உள்ள முகாம்களில் 129 பேரும் இவர்களை விட மேலும் பல மாணவர்களும் முகாம்களில் உள்ளனர்.

இவர்களின் முகாம் வாழ்க்கை இப்படியே தொடர்வதால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படும் - என்றார்.

பல்கலைக்கழகத்தின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விவரமாகத் தெரிந்துகொள்ளக் கூடியதான ஏற்பாடுகளுடன் மீண்டும் சந்திப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (203- 111)

## ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தால் சிறுபோக விவசாயிகளுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

ஐ.நா. உணவு விவசாய நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் சிறுபோகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்கி வருகின்றது.

மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 500 விவசாயிகளுக்கு நிலக்கடலை, பயறு, கௌபி போன்ற நல்லின விதைகளையும், மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 700 பயனாளிகளுக்கு மிளகாய், கத்தரி, பாகல், தக்காளி, பயத்தை, கீரை, வெண்டி போன்ற மரக்கறி விதைகளையும் வழங்கியுள்ளது.

உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான இந்தத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பயனாளிகளுக்கும் தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளதாக ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் ஆ.சிவானந்தன் அறிவித்துள்ளார். (204)




வண்ணை,ஜூலை9

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் மாலை 5 மணிக்கு ஆயத்த வழிபாடுகள், திருச்செபமாலையுடன் தொடங்கும்.

எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு நற்கருணை விழா வழிபாடுகள் தொடங்கி நற்கருணை சுற்றுப் பிரகாரம் இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பிற்பகல் 4.30 மணிக்குத் திருசொரூப பவனி இடம்பெறும். (204-160)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை9

வரணி மாசேரி குருநாதர் ஆலய பொங்கல் நாளை மறுதினம் சனிக்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் நடைபெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை9

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-207)

## தென்மராட்சி வலய மாணவருக்கு சமய அறிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்கிடையேயான சைவசமய அறிவுப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடத்தி வகுப்பு ரீதியாக இரு மாணவர்களைத் தெரிவுசெய்து உரிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (203-207)

## மத அமைப்புகளுக்குச் சலுகை அடிப்படையில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வழங்க ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை9

மத அமைப்புகளுக்குச் சலுகை அடிப்படையில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அமைச்சின் ஊடகப்பிரிவு இந்த விடயம் தொடர்பாக அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின்போது பால், இயற்கைப் பசளைகளைப் பெறும் நோக்கிலும், இறையாசியைப் பெற்றுச் சமயப் பண்புகளை வளர்க்கும் நோக்கிலும் கிராமங்கள் மற்றும் நகரங்கள் தோறும் கோசாலைகளை அமைக்கும் தமது திட்டத்தை முன்வைத்த மேற்படி பிரதிநிதிகள் குழுவினர் இதற்கு ஏற்ப யாழ்.சத்திரம் வைரவராலயத்திற்கு வடக்கே அமைந்திருந்த பண்டைய யாத்திரீகர் பசு பேணல் கருமங்கள் சிறப்புற்ற காணியைப் பெற்றுத் தரும்படியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் பதிவுசெய்யப்பட்ட மத அமைப்புகளுக்கு மாதாந்தச் சலுகைக் கட்டண அடிப்படையில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வசதிகளைப் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொண்டனர்.


கிராமங்கள் மற்றும் நகரங்கள் தோறும் கோசாலைகள் அமைக்கும் திட்டம் குறித்து வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதிவுசெய்யப்பட்ட மத அமைப்புகளுக்கு மாதாந்தச் சலுகைக் கட்டணத்தில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வசதிகளை வழங்க உரிய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இத்தொலைபேசி வசதிகளைப் பெறுவதில் தடைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மத அமைப்புகள் உடனடியாகத் தன்னுடன் தொடர்புகொள்ளும் படியும் கேட்டுக்கொண்டார் - என்றுள்ளது. (203)

## நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம்,ஜூலை9

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட, உரிமை கோரப்படாத பொருள்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

அன்னாசி யூஸ் ரின்கள், மீன் ரின்கள், பிஸ்கட், உடுபுடைவைகள் உட்படப் பல பொருள்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன என மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (204)




## தென்பகுதிக்கு வெங்காயம் அனுப்பப்படுவதால் இனிவரும் காலங்களில் தட்டுப்பாடு ஏற்படலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு பெருமளவு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதால் இம்முறை மாரிகாலத்தில் வெங்காயத்திற்குப் பெரிதும் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

கைவிடப்பட்ட விவசாய நிலங்களைச் சீர்செய்து வெங்காய நடுகைகள் மிகவும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

வெங்காயச் செய்கை சூடுபிடிக்கும் இவ்வேளையில் விதை வெங்காயத்திற்கு மறுபுறத்தில் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

நீர்வேலி, கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி, இடைக்காடு, ஊரெழு, நவக்கிரி, அச்சுவேலி, ஆவரங்கால் போன்ற இடங்களிலும் அதிகளவில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (203-224)

## நெடுங்குளம் அம்பல விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை9

கொழும்புத்துறை கிழக்கு, நெடுங்குளம் அம்பலவாணர் விநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.48 மணிமுதல் பிற்பகல் 12.25 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு விநாயகர் வழிபாடு நடைபெற்று முற்பகல் 10.50 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம் இடம்பெறும். (204)

(சிறப்பு மலர் 10ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுப்பிட்டி வடகிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தொழில்சார் கடன் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கரித்தாஸ்- கியூடெக் நிறுவன அதிகாரி என்.தவராஜகுமார் ஆகியோர் கடன் உதவிகள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

## 22ஆம் வருட அன்பின் நினைவு



**அமரர் செ.திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னாள் முகாமையாளர்- பருத்தித்துறை சிங்கர் கொம்பனி, முன்னாள் தலைவர்-உடுப்பிட்டி கிராம சபை)

அன்னை மடியில் 15.07.1920 — ஆண்டவன் அடியில் 12.07.1987

*திதி: 09.07.2009*

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் இருபத்திரண்டு சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

உங்கள்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கரணவாய் மத்தி,
கரவெட்டி. (86851)

## நீர்வேலிப் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை9

நீர்வேலிப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் பயப்பீதியில் இருப்பதாகத் தெவிக்கப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் இரவு 11 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே திருடர்களின் இந்த நடவடிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நீர்வேலி தெற்குப் பகுதியில் சிலரின் வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள் மிகவும் தந்திரமான முறையில் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் இரவில் விழிப்புடன் இருப்பதாகக் கூறுப்படுகின்றது.

(203-224)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலநாதன் சாவித்திரி**
(போபி)

மலர்வு : 11.05.1950
உதிர்வு : 09.07.1995

அம்மா ஆண்டுகள் பதினான்கு என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்- கனிந்த
அன்பு உள்ளமும் அழகிய திருமுகமும் எம்
கண்களை- நெஞ்சத்தை விட்டகலாதம்மா!

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
**அன்புக் கணவர், பிள்ளைகள்.**

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (86734)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் திருமதி பரஞ்சோதி இராசரத்தினம்

அன்னையின் மடியில் 23.05.1937

இறைவன் அடியில் 09.06.2009



நாள்கள் முப்பத்தொன்று கடந்து போனது
ஆனால் நாம் வாழும் காலம் வரையும்
உங்கள் அன்பை ஒருபோதும் மறவோம்

என்றும் நினைவுடன்....
**குடும்பத்தினர்.**

"கன்னிகா பவனம்",
பிரதானவீதி, வல்வெட்டி.
தொ.பே.இல.: 060 2215228

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மது மனிதனைக் குடிக்கிறது

ந. துஷாந்தி, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.



நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் என்பார்கள். இதேபோல் மனிதன் வாழவேண்டுமாயின் சில தீய பழக்கவழக்கங்களைக் கைவிடவேண்டும். அந்த வகையில் மனிதனாகப் பட்டவன் போதை தரும் வஸ்துக்களையும், புகைத்தலையும் கைவிட்டு வாழவேண்டும். இன்றைய உலகில் குறிப்பாக மாணவ சமுதாயம் எதிர்நோக்கும் எதிர்கணிய பெறுமானமுள்ள பிரச்சினையாகப் போதைப்பொருள் பாவனை காணப்படுகிறது. நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருளல்ல. நாம் சிறு வயது தொடக்கம் நல்லொழுக்கத்தை பேணிவரவேண்டும். இப்போது ஒழுக்கம் என்பது குதிரைக் கொம்பாகப் போய் விட்டது. பத்திரிகைகளைப் பார்க்கும்போது வயதுக் கட்டுப்பாடின்றிக் கற்பழித்தல், சமூகச் சீரழிவுகள், சண்டை கள், பிள்ளைகளைத் தந்தை வெட்டிக் கொல்வது, மனைவியை அடிப்பது அதனால் மனைவி தூக்கில் தொங்குவது போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாக எமது சமூகத்தில் நடைபெறுவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

*''மனிதன் மதுவைக் குடிகின்றான்*
*பின் மது மதுவைக் குடிக்கிறது*
*இறுதியில் மது மனிதனைக் குடிக்கிறது.''* என்று ஒரு சீனப் பழமொழி கூறுகின்றது. மனிதன் தனது கௌரவத்தைக் கூட இதற்காக இழக்கிறான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவரின் குறள் தான் ஞாபகத்திற்கு வருகின்றது அதாவது ''கள்ளுண்டான் நஞ்சு கண்டான்'' என்பது உலக மக்களிடையே செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. குடி குடியைக் கெடுக்கும். மது என்பது உலக மக்களி டையே நாகரிகப் பானமாக மாறியுள்ளது. அதேவேளை மது அருந்துபவன் தேகாரோக்கியமாக ஒரு போதும் வாழமாட்டான். அதற்குப் பதிலாக மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களை ஏன் இந்த உலகை விட்டு முதல் பஸ்ஸில் ஏறிப் பயணமாவான். இப்படி ஒரு நிலை குடும்பத் தலைவனுக்கு ஏற்படு மாயின் அவன் விட்டுச் சென்ற குடும்பம் அவனது பிள்ளைகள் சீரழிந்து போகும். எனவே இந்தச் சீரழிவு வேண்டுமா என்று மது அருந்துபவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மது அருந்துவதால் உலகில் ஒரு வருடத்தில் ஒரு கோடி மக்கள் மரணிக்கிறார்கள். போதைப்பொரு ளால் 25 வயது தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள் தான் பாதிப்படைகிறார்கள். எனவே இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் கட்டுப்பாடாக வாழப்பழகினால் மதுவில் இருந்து விலகிக்கொள்ளலாம். ஒருவன் அருந்தும் மதுவில் 10 வீதம் சுவாசித்தல் மூலமும், சிறுநீர் மூலமும், வியர்வை மூலமும் வெளியேறுகின்றன. மிகுதி 90 வீதம் மது அருந்தி 2 மணித்தியாலத் தில் இரத்தத்தில் சங்கமமாகிறது. இதனால் மனிதனின் சிறுநீரகம், இரைப்பை, நரம்பு மண்டலங்கள், ஈரல், சுவாசப்பை போன்ற பல அங்கங்களின் செயற்பாடு குன்றும். நோயை வளர்த்து நலன் பறிக்கப் பட்டு, ஈற்றில் உயிரைக் குடிக்கும். எனவே இந்த வாழ்க்கை எமக்கு வேண்டுமா? என்று மது அருந்துபவர்கள் சிந்தித்தால் மதுவை ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை நாட்டிலமைக்க முடியும்.

''ஒரு நாளைக்கு 10 சிகரெட் புகைக்கும் ஒருவன் நாளொன்றுக்கு 11 நிமிடத்தை தனது ஆயுளில் இருந்து குறைத்துக்கொள்ளுகிறான்.'' அது மட்டுமல்லாமல் போதைப் பொருள்கள் பாவித்தால் மனிதன் தன் நினைவை மறந்து பல்வேறு தீய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றான். அது மட்டுமா தனது உடைமைகளை விற்றுப் போதை வஸ்துவை வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். அத்தோடு இவ் வஸ்துக்கள் அவனை அணு அணுவாகக் கொலையும் செய்கின்றன. போதைவஸ்துக்களுக்கு உதாரணமாக கஞ்சா, அபின், கொக்கைன், கெரோயின், மதுசாரம் , புகையிலை போன்றவற்றை போதைப்பொருளாகக் குறிப்பிடலாம். இது புகைத்தல், பொடியாக்குதல் உணவு மூலம் மற்றும் ஊசிகள் மூலமும் உள்ளெடுக்கப்படுகின்றன. இதற் காக அரசு 1948இல் தேசிய பயங்கரவாத போதை வஸ்து கட்டுப்படுத்தும் சபையை உருவாக்கியது.

இத்தகைய விஷமுட்களை ஒழிப்பதனால் நாட்டின் செல்வங்களாகிய மக்களும், எதிர்காலத் தலைவர்களாகிய இளைஞர்களும், சிறுவர்களும் தமது வாழ்வைச் சிறப்பாக அமைத்து இவ்விஞ்ஞான உலகை விந்தை மிகு உலகாக மாற்றலாம்.

## ஆதாரம்!

கடலின்றி அலையில்லை
வானமின்றி விண்மீனில்லை
வளியின்றி சுவாசமில்லை
உடலின்றி உயிரில்லை
உறக்கமின்றி கனவில்லை
கவர்ச்சியின்றி காதலில்லை
காதலின்றி காவியமில்லை
நட்பின்றி ஜீவனில்லை
யாவும் ஒன்றின் ஆதாரமே!

இ.நிஜன்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.




## மகிழ்ச்சி தரும் நட்பு

*"பிரிந்து போன நட்பினைக் கேட்டால் பசுமையான கதைகளைச் சொல்லும்......'' என்று தொடரும் பாடலடிகளை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். நட்பின் புனிதத்தை, இலக்கணத்தை இனிமையாகக் கூறும் இசையல்லவோ அது உண்மையிலேயே உள்ளத்திற்கு இதம் சேர்ப்பது தூய்மையான, கள்ளங்கபடமற்ற உண்மை நட்புறவாகும்.*

*உலகிலேயே பிறந்த அனைத்து உயிர்களுக்கிடையேயும் நட்பு இருக்கிறது. இருக்கவும் வேண்டும். நட்பு மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றது. புரிந்துணர்வுக்கு வழிகோலுகிறது. நாம் ஒருவரோடு நட்புக்கொண்டு விட்டோ மானால் அவருக்கு நம் மனதில் ஒரு தனி இடம் கொடுத்து விடுகின்றோம். வீட்டில் நமது பெற்றோர், உறவினர் என்று கூடி வாழும் எமக்கு வீட்டை விட்டு வெளியேறும் போது இந்த உறவுகள் தொடர்வதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாடசாலையிலோ, வீட்டிலோ எமக்கு அன்பு தருவது, தனிமை போக்குவது நாம் உருவாக்கிய நட்பே, நட்புள்ளங்களே. சமூகத்தில் நாம் எதிர்கொள்ளும் எத்தனையோ விடயங்கள், பிரச்சினைகள் உள்ளன. அவற்றுகெல்லாம் நமது பெற்றோரிடமோ கூறித் தீர்வை பெற முடியாது. சில விடயங்களை நாமேதான் கையாள வேண்டும். இத்தகைய தருணங்கள் எமக்கு உதவியாக, எமது குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி இது சரி, இது தவறு என்று உணர்த்தும் உள்ளமாக எமது நட்பு அமைகின்றது. இன்னுமோர் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொண்டால் நமக்கு ஏதோ ஒரு குறித்த விடயத்தில் எல்லையற்ற பிடிப்பும் ஈடுபாடும் தோன்றுகிறது என வைத்துக் கொள்வோம். இது குறித்து வீட்டிலே அனுமதி கேட்டால் சம்மதிப்பார்களா, தடை விதிப்பார்களா என்றொரு ஐயம் மனதில் எழுகின்றது. இத்தருணத் தில் பெற்றோரிடம் நேரடியாகக் கேட்கப் பயமோ, கூச்சமோ ஏற் பட்டால் எமது நண்பர் மூலம் பெற்றோருக்கு உணரச் செய்யலாம். நமக்குச் சங்கடமும் இருக்காது. ஒரு வேளை நம் பெற்றோருக்கு குறித்த விடயம் தொடர்பாக விருப்பம் இல்லை என்றாலும் பேசிடாது, அன்பாக அதைத் தவிர்க்குமாறு கூறுவார்கள். அத்தகைய நன்மை நட்பினிலே உண்டு.*

*எனினும் நட்புறவில் தூய அன்பு பிரதிபலிக்க வேண்டு மானால் அதை அடைந்திருக்கும் உள்ளங்கள் தூய தாக இருக்க வேண்டும். இதற்கு நாம் உருவாக்கும் அல்லது உருவாகும் நட்பு உண்மையாக இருக்க வேண்டும். சிறந்த விட்டுக் கொடுப்பு, அந்நியோன்ய மும் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கவேண்டும். கலப்படமற்ற நட்பானது ஆயுள் வரை சந்தோசத்தைக் கொடுக்ககூடியது. நல்ல நட்பு நமது வெற்றிகளுக்கு உறுதுணையாகவும் அமையக்கூடியது என்பதை எம்மால் மறுக்க முடியாது.*

*ஆகவே, சிறந்த நட்பை நல்ல நட்புள்ளங்களை நீங் களும் தேடிக்கொள்ளுங்கள். "நட்புக்காக எதையும் இழக் கலாம். ஆனால் எதற்காகவும் நட்பை இழக்கக் கூடாது".*

கா.உ தயாமலர்
கொத்தியகாடு,
தொண்டைமானாறு.

## பாசம்

செல்போன் கோபுரத்தில்
ஒரு குருவிக் கூடு
குஞ்சுகள் தவிக்கின்றன
தாயுடன் தொடர்புகொள்ள.

## வானவில்

யார் கை பட்டு
ஆகாயத்தில்
வண்ண மயமாகியதோ!

## மனச்சாட்சி

மனித உள்ளத்தின்
மௌன மொழி.

## கல்லறை

நிம்மதியற்ற
உலகில்
நிம்மதியாய்
உறங்கும்
மறுஉலகு.

கி.டிலோ
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

## கேள்விக்கு என்ன பதில்? -30

*அமெரிக்கர்களால் விண்வெளிக்கு முதன்முதலாக மனிதனை அனுப்பும் பணி கள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். விண்வெளிக்குச் செல்லும் வீரர் அமெ ரிக்காவின் புகழைக் குறிக்கும் வாசகங்களை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி விடு வதற்கான திட்டமும் தயாரானது. ஆனால் ஒரு பிரச்சினை விண்வெளியில் ஈர்ப்பு விசை இருக்காது. எனவே பேனா முதலான எழுதுகருவிகளில் உள்ள மை கீழிறங் காது. இதனால் அவற்றைப் பயன்படுத்தி எழுதமுடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது தலையைப் பிய்த்துக்கொண்டனர்.*

*அமெரிக்க விஞ்ஞானிகளால் கடைசியாக ரஷ்யாவிடம் ( அது ஏற்கனவே விண் வெளிக்கு மனிதனை அனுப்பியிருந்தது) உதவி கோரப்பட்டது. அமெரிக்கர்களின் பிரச்சினைக்கு ரஷ்ய விஞ்ஞானிகள் நல்ல தீர்வு கூறினர். அது என்ன?*

*(சரியான விடையை 15.07.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)*

## கேள்விக்கு என்ன பதில்? -28இன் சரியான விடை

'பென்சிலைப் பாவியுங்கள்' என்று கூறியிருக்கிறார்.

### கேள்விக்கு என்ன பதில்? - 28- பரிசு பெறுவோர்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | - த.கோகிலநாத், குருநகர் நலன்புரி நிலையம், யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | - ஆர்.ஜெயமோகன், கரணவாய் தெற்கு, அண்ணாசிலையடி. |
| மூன்றாம் பரிசு | - கு.சியாமினி, நலன்புரி நிலையம், கைதடி, யாழ்ப்பாணம். |

### பாராட்டுப் பெறுவோர்:

1. அ.பிறிஜிற்றா, 124, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம்.
2. காத்தலிங்கம் உதயமலர், கொத்தியகாடு, தொண்டைமானாறு.
3. இ.வேணுகுமாரன், கரப்பிட்டி பிள்ளையார் கோயிலடி, அராலி தெற்கு, அராலி.
4. நாகன் கிருஷாந்தி, உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு.
5. ச.கீதசபா, நெசவுசாலை ஒழுங்கை, இருபாலை றோட், கோண்டாவில்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.........................................
முகவரி :-.........................................
:-.........................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

### ஜூலை 03



1988ஆம் ஆண்டு ஜூலை 3 இல் ஈரான் நாட்டுப் பயணிகள் 'ஜெற்' விமானம் ஒன்றும் அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்றும் சுட்டுவீழ்த் தப்பட்டன. இதில் 298 பயணிகள் உயிரிழந்தனர்.

### ஜூலை 04

ஒவ்வொரு வருடமும் ஜூலை 4ஆம் திகதி அமெரிக்காவின் சுந்திர தினமாகக் கொண்டாடப்படு கின்றது. 1776ஆம் ஆண்டு பில டெல்பி யாவில் இதேநாளில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர உடன் படிக்கையின் பின்னரே இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது



### ஜூலை 05




1945ஆம் ஆண்டு ஜூலை 5இல் நடை பெற்ற பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் அசைக் கப்படமுடியாதவ ராகக் கருதப்பட்ட வின்ஸ்டன் சேர்ச்சிலும் அவரது கொன்ஸர் வேட்டிவ் கட்சியும் படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. இதில் தொழில் கட்சி அமோக வெற்றியீட்டியது.

### ஜூலை 06

'பென்சிலின்' மருந்தைக் கண்டறிந்த விஞ்ஞானியான அலெக் சாண்டர் பிளமிங் 1881ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி பிறந்தார்.



### ஜூலை 07



'ஷெர்லக் ஹோம்ஸ்' என்ற பாத்திரம் துப்பறியும் கதைகளைத் தொடராக எழுதியவரான சேர் ஆர்தர் கானன் டொயில் 1930ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் திகதி மரணமானார்.

### ஜூலை 08

1889ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதிதான் குத்துச் சண்டைகளின் போது 'மென்மையான' தன்மை கொண்ட கையுறைகளை அணியும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. அதுவரை காலமும் வெற்றுக் கைகளால்தான் குத்துச் சண்டையில் வீரர்கள் மோதிக் கொண்டார்கள்.





பின்லாந்தைச் சேர்ந்த 'ஜோன் வான் எய்க்' என்ற புகழ்பெற்ற ஓவியர் 1441ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் பரீட்சைத்தொடர் - 2009

**வினாத்தாள் - II** நேரம்: 1 மணி15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

கீழ்வரும் பந்தியை வாசித்து விளங்கிக்கொண்டு அதன் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.

எல்லைகளற்றுப் பரந்து விரிந்திருந்த வாவியில் சாகரம் போல் சிறுசிறு அலைகள் தோன்றும் அளவிற்கு நீர்நிரம்பிக் காணப்பட்டது. நீரைத் தேக்கிவைப்பதற்காக அமைக்கப்பட்ட அணைக்கட்டு நீண்டு உயர்ந்த பருவதமபோல் தோற்றமளித்தது. அணைக்கட்டிற்குக் கீழாக கண்ணுக்கெட்டாத தூரம்வரை காட்சியளித்த கழனிகள் பச்சைப பசேல் என சமதரைமீது பச்சைக்கம்பளம் விரித்தது போல் காணப்படும். அதன் அருகருகே நின்று பசியாறுகளை மேய்ந்துகொண்டிருக்கும் ஆநிரையும், அழகாகப் பறந்துதிரியும் பட்சிகளும் இயற்கையின் அழகை மெருகூட்டிக்கொண்டிருக்கும். அவ்விடத்திற்கு செல்லும் மனிதர்களால் அவ்விடத்தின் குளிர்மையையும் செழுமையையும மெல்லமெல்ல உணர முடியும்.

01. கழனி என்பதன் ஒத்தபொருள் யாது? ..............................
02. வாவியில் நிரம்பிக் காணப்பட்ட பொருள் யாது? ..............................
03. பந்தியில் இடம்பெற்ற அடுக்குமொழிச் சொற்றொடர் ஒன்று எழுதுக.
    ..............................
04. பச்சைக்கம்பளம் விரித்தாற்போற் காணப்பட்டது எது? ..............................
05. அருகருகே என்ற சொல்லைப் பிரித்தெழுதுக. ..............................
06. கண்ணுக்கெட்டாத தூரம்வரை என்ற தொடரின் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது?
    ..............................
07. பந்தியில் இடம்பெற்ற உயர்திணைச் சொல் ஒன்று எழுதுக.
    ..............................
08. பருவதம் என்பதன் பொருள் யாது? ..............................
09. அணைக்கட்டு எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
    ..............................
10. குளிர்மையையும், செழுமையையும் உணர்வதற்கு எங்கு செல்லவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

11. We buy .............................. From the post office. (books, pencils, stamps)

பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

12. இது என்ன? ..............................

பின்வரும் சிங்கள உரையாடலை தமிழ் எழுத்துக்களில் தமிழில் எழுதுக.

13.




கீழே தரப்பட்டுள்ள அடைப்பிற்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

| இக்கிரி, எள்ளு, ஆமணக்கு, கற்றாளை, நிலக்கடலை, முசுமுசுக்கை, கோதுமை |
|---|

உருக்களுக்குப் பொருத்தமான பெயர்களைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

14. 15. 16. 17. 18.




19 தொடக்கம் 28 வரையான வினாக்களிற்கு சரியான விடையினைத் தெரிவுசெய்க.

19. ஆண்டுக்கு ஒருதடவை மாத்திரம் காய்க்கும் காய் எது?
    1) பப்பாசி. 2) கொய்யா. 3) மரமுந்திரிகை.

20. காற்றின் உதவியுடன் இனம் பரவும் தாவரம் எது?
    1) திப்பிலி. 2) சீதேவியார் செங்கழுநீர். 3) புன்னை.

21. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக்குவளையில் சிறிதளவு தேங்காய் எண்ணெய் இட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் அவதானிக்கக்கூடிய சரியான தோற்றம் யாது?




22.



மஞ்சள் நிறப்பின்னணியுடன் காணப்படும் இவ்வீதிச்சமிக்ஞையினால் வெளிப்படுத்தப்படுவது யாது?
1) பிள்ளைகள் பாதையைக்கடக்குமிடம் முன்னால்.
2) பாதசாரிகள் பாதையைக்கடக்குமிடம் முன்னால்.
3) பாதசாரிகள் பாதையைக்கடக்குமிடம்

23. புளியமிலைகளின் வடிவத்தை ஒத்த வடிவமுடைய இலைகள் இருக்கும் தாவரம் எது?
    1) அகத்தி. 2) தொட்டாற்சுருங்கி. 3) வல்லாரை.

24. தண்டில் காய்க்கும் தாவரம் எது?
    1) எலுமிச்சை. 2) மங்குஸ்தான். 3) விளிம்பி.

25. அதிகளவில் உடற்சக்தி விரையமாகும் விளையாட்டு அல்லாதது எது?
    1) பளுத்தூக்குதல். 2) கரம் அடித்தல். 3) கயிறிழுத்தல்.

26. அயடீன் கலந்த உப்பினை உட்கொள்ளாமையினால் ஏற்படும் நோய் எது?
    1) நீரிழிவு. 2) மாலைக்கண். 3) கண்டமாலை.

27. தொற்று நோய் பரவும் காரணி அல்லாதது
    1) நீர். 2) காற்று. 3) ஒளி.

28. சர்வதேசமைதானத்தில் உள்ள ஓட்டப்பாதைகளின் எண்ணிக்கை
    1) 6 2) 8 3) 12

பல்வேறு தொழில்களுக்குப் பயன்படுத்தும் சில கருவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

01 02 03 04 05 06




கீழுள்ள வேலைகளைச் செய்வதற்கு மிகப் பொருத்தமான கருவியின் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

29. மரக்குற்றியில் உருவங்களைச் செதுக்குவதற்கு ..............................
30. மாசிக்கருவாட்டினைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டுதல் ..............................
31. மரக்குற்றியில் துளையிடுவதற்கு ..............................
32. கம்பிகளை இறுகப் பிணைத்தல் ..............................

கீழே உள்ள இசைக்கருவிகள் எவ்வகையைச் சார்ந்தவை என்பதைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

33. 34. 35.



கீழே உள்ள விளையாட்டுக்கள் சுவட்டு நிகழ்ச்சிகளா? மைதான நிகழ்ச்சிகளா? என்பதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

36. 37. 38.



பின்வரும் கணிதச் செய்கைகளுக்கு விடை தருக.

39. மூன்று கிலோகிராம் மாவின் விலை ரூபா 66 எனின், 250 கிராம் மாவின் விலை யாது?
    ..............................

40. ராதாவை விட மாலா ரூபா 30/= குறைவாக வைத்திருந்தாள். அவர்கள் இருவரிடமும் மொத்தம் 100 ரூபா இருந்தால் மாலாவிடம் மொத்தம் எத்தனை ரூபா இருக்கும்?
    ..............................

41. சுரேஸ் என்பவன் 60Km தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் நிமல் என்பவன் 100Km தூரத்தை ஓடுவான். நிமல் 50Km தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் சஸ்லி என்பவன் 40Km தூரத்தை ஓடுவான். இவர்களில் மெல்ல ஓடுபவன் யார்?
    ..............................

42. ஒரு கடையில் விற்பனைக்கிருந்த 65Kg சீனியில் 38Kg 75g சீனி விற்கப்பட்டதெனின், எஞ்சியுள்ள சீனியின் அளவு யாது? ..............................

43. ஒருவர் 7 மணி 05 நிமிடங்கள் பயணம் செய்து பி.ப 5 மணிக்கு தனது பிரயாணத்தை நிறைவு செய்து கொண்டார் எனின், அவர் பிரயாணத்தை ஆரம்பித்த நேரம் யாது?
    ..............................

44. ஒரு தொட்டியில் நிறம்பியிருந்த 480L நீரில் 5/6 பங்கு நீர் உபயோகிக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?
    ..............................

45. ஒவ்வொரு நாளும் 8.36m.m மழைவீழ்ச்சி இடம்பெற்றால் குறிப்பிட்ட 4 நாட்கள் இடம்பெற்ற மொத்த மழைவீழ்ச்சியின் அளவு யாது?
    ..............................

பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளின் கீழ்க் கீறிடுக.

46. "வெற்றிலை" என்ற சொல் சரியாக பிரித்தெழுதப்பட்டுள்ள முறை எது?
    1) வெற்றி + இலை. 2) வெறுமை + இலை. 3) வெற் + றிலை.

47. பின்வரும் சொல்லில் எழுத்துப் பிழையற்ற சொல் எது?
    1) அற்பணிப்பு. 2) அப்பணிப்பு. 3) அர்ப்பணிப்பு.

48. "படீரென" பட்டாசு வெடித்தது. இதில் வரும் படீரென என்பது எவ்வகைச் சொல்லாகும்?
    1) அடுக்குமொழி. 2) இரட்டைக்கிளவி. 3) ஒலிக்குறிப்பு.

49. அழகிய கோயிலை இராஜஇராஜ சோழமன்னன் நுட்பமாக கட்டுவித்தான். இதில் வரும் செயப்படுபொருள் அடைமொழி யாது?
    1) நுட்பமாக. 2) அழகிய. 3) கோயிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. ஆவணங்களைப் பேணிவைக்கும் அட்டை எவ்வாறு அழைக்கப்படும்?
1) கோர்வைஅட்டை. 2) கோவைஅட்டை. 3) கோல்வைஅட்டை.

பின்வரும் தரவுகளை அவதானித்து கணிதச்செய்கைகளுக்கு விடை தருக. குறித்த தினத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட எரிபொருளின் அளவு தரப்பட்டுள்ளது.

01. விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் அளவு 3600l.
02. விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெயின்அளவு பெற்றோலின் அளவின் ¾ பங்கு.
03. விற்பனை செய்யப்பட்ட டீசலின் அளவு மண்ணெண்ணெயின் அளவைப்போல் 3 மடங்கு.
04. விற்பனை செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் அளவின ¼ பங்காகும்.

51. அன்றையதினம் விற்பனை செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு யாது?
..................................

52. விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெயின் அளவு யாது?
..................................

53. விற்பனை செய்யப்பட்ட டீசலின் அளவு யாது?
..................................

54. ஒரு லீற்றர் பெற்றோல் ரூபா 157 எனின், 5L பெற்றோல் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?
..................................

55. விற்பனை செய்யப்பட்ட பெற்றோலுக்கும் டீசலுக்கும் இடையிலான அளவு வேறுபாடு யாது?
..................................

56. அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட அனைத்து எரிபொருள்களினதும் மொத்த அளவு யாது?
..................................

பின்வரும் சம்பவத்தின் தொடர்ச்சியாக ஆறு வாக்கியங்களை நான்கு சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

நீண்ட நாட்களாக வியாதிக்குள்ளாகியிருந்த நோயாளி பல வைத்தியர்களிடம் தனது நோயை கூறிச் சிகிச்சை பெற்றபோதும் எதுவித பயனும் அளிக்கவில்லை. இறுதியாக ராஜா என்ற வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றதும் ஓரிரு வாரங்களில் பூரண குணமடைந்து விட்டார். இதனால் அந்த நோயாளி மீண்டும் ஒருமுறை ராஜாவைச் (வைத்தியரை) சந்தித்து தனது நன்றியைத் தெரிவித்தார். அப்பொழுது நீர்தான் அந்த ராஜாவாக இருந்தால் உமது மனதில் எத்தகைய எண்ணங்கள் தோன்றும்.

57. ..................................................................

58. ..................................................................

59. ..................................................................

60. ..................................................................

61. ..................................................................

62. ..................................................................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 17 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

**ஆக்கம்:-**
**ஆசிரியர் திரு.எஸ்.தயாளலிங்கம்.**
**திருகோணமலை.**

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
071-6850005 / 071-4273035.



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் மானிப்பாய் பிரதேச 10 முன் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை, சவர்க்காரம் போன்றவைகள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (20)



கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விநோத உடைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவனுக்குத் தொழிலதிபர் செ.பஞ்சலிங்கம் பரிசில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (288)







அரசடி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யூனியன் அஷ்யூரன்ஸ் முகாமையாளர் என்.மதிவதனன் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர் ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாள் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்.செயலக திட்டமிடல் பிரிவு அபிவிருத்தி உதவி [illegible]வன் நிகழ்த்துவதையும் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரக உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். (28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம்
# ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயம்
## ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

## ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயம்



இந்த ஆலயமானது சோழர் காலத்தில் உதயமாகியது என்பதை சில நூல்களில் இருந்து அறியக்கூடியதாய் உள்ளது. நல்லை இராச்சியம், கௌமுகி யாழ்ப்பாணச் சரித்திரம, யாழ்ப்பாண வைபவமாலை இன்னும் பல.

இந்த ஆலயத்திற்கு உள்ள சிறப்பு அம்சங்களாக கோயில் அருகில் நெடுங்குளமும் வயலகளும் இருப்பது அரசர் காலத்தில் கோயில் ஒன்றைக்கட்டும்போது நைவேத்தியம் வைப்பதற்கு ஏதுவாக மானியமாகத்தான் வயலையும் குளத்தையும் அந்த அரசர்காலத்தில் அமைத்தார்கள். இதைவிட விநாயகர் விக்கிரகத்தின் அமைப்பு ஐநூறு, அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதான அமைப்பு என ஸ்தபதியர்கள் கூறினார்கள்.

அக்காலத்தில் கோமுகை சிங்கமுகத்தை கொண்டதாக இருந்தது. சிங்க ஆரிய சக்கரவர்த்திகள் ஆண்டமைக்கு சான்றாக இருக்கின்றது. நல்லை நகரை ஆண்ட மன்னர் வரிசையில் காலிங்க சிங்க ஆரியன், மார்தாண்ட சிங்க ஆரியன், குணபூசனசிங்க ஆரியன், வரோதய சிங்க ஆரிய சக்கரவர்த்திகள் என்னும் இம் மன்னர்கள் அனைவரும் செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பெயர்களில் அரச கட்டில் ஏறும்போது இப்பெயர்களை சூடிக்கொண்டார்கள் என்று கூறப்படுகின்றது.

இறுதியாக யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி அரசன் போர்த்துக்கேயரால் பிடிபடபோகு முன் நெடுங்குளத்தில் நீராடி ஆனைமுகக் கடவுளை வணங்கிக்கொண்டு அவர்களிடம் பிடிபடாமல் தப்பித்துச் செல்வதற்காக இத்துறைமுகம் ஊடாக சென்றான் என போர்த்துக்கேய நூலில் அப்போதைய கொல்லன் தோட்டம் இப்போது கொழும்பு எனவும் இப்போதைய கொழும்புத்துறை இப்போது கொல்லன்துறை எனவும் அழைக்கப்பட்டது என இந்நூல்களில் இருந்து தெரிய வருகின்றது.

கொழும்புத்துறை கடல்மார்க்கமாக கப்பலில் செல்லும்போது சங்கிலியன் போர்த்துக் கேயரால் பிடிபட்டான் என்று குவைறோஸ் என்னும் நூலில் உள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள ஆலயப்பதி வேட்டில் 1804 ஆம் ஆண்டு 59ஆம் இலக்கத்தில் நெடுங்குளம் கணபதிப்பிள்ளை ஆலயம் என இவ்வாலயம் பதியப்பட்டு உள்ளது.

நல்லை இராட்சியத்தில் மிக அண்மையாகவுள்ள துறைமுகமாக கொழும்புத்துறை விளங்கியதாகவும் நூற்றுக்கணக்கான கப்பல்களில் வரும் பொருள்களையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பொருள்களையும் பார்வையிடவும் வரி வசூலிப்பு செய்வதற்காகவும் அரியாலையில் நிலை கொணடுள்ள குதிரைப்படைகளை கண்காணிக்க வரும்போது நல்லை இராச்சியத்தை ஆண்ட மன்னர்களின் வரிசையில் வந்த இறுதி மன்னான சங்கிலி அரசன் முத்திரைச் சந்தையில் இருந்து செம்மணி ஊடாக வந்து இவ்வாலயத்தை தரிசித்துக் கொண்டு இப்பாதையூடாகத்தான் துறைமுகத்துக்கு போக்குவரத்து செய்ததாக அறியமுடிகின்றது.

இம் மூதாதையர்கள் தொன்றுதொட்டு இவ்வாலயத்தை ஆதரித்து வந்துள்ளதாகவும் யாழ்.கோட்டை வாசலில் இருந்து கொழும்புத்துறை கடற்கரை வரையும் இக்கோயிலை ஆதரிப்பவர்கள்தான் இருந்தார்கள் என்றும் றோயல் ராஜசிங்கம் என்ற நூலில் பலசுவையான அம்சங்களுடன் இதுவும் காணப்படுகின்றது. போர்த்துக்கேயரால் இக் கோயில் அழிக்கப்பட்டு அங்கு இருந்தவர்களை மதம்மாற்றி கத்தோலிக்க மதத்தை தழுவியவர்களுக்கு தமிழரசுகள் பரம்பரையைச்சார்ந்த சத்துருக்கள்சிங்கி, புவிமானச்சிங்கி, எதிர்மானச்சிங்கி ஆகிய வம்சா வழியினருக்கு போர்த்துக்கேய தளபதியின் வாசஸ்தலம் இவர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

அழிக்கப்பட்ட இந்த ஆலயத்தை காலஞ்சென்ற அம்பலவாணர் விநாயகமூர்த்தி என்பவரால் புனரமைக்கப்பட்டு நித்திய, நைவேத்திய பூசைகள் செயப்பட்டு வரும்வேளையில் இவ்வாலயக் குருக்கள் இயற்கை எய்திய தன் காரணமாக பூசைகள் சற்று தாமதமடைந்தது.

இக்காலகட்டத்தில் செங்கட்டியினாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்ட இவ்வாலயச் சூழல் பற்றைக்காடுகளால் சூழ்ந்தும் ஆலயம் இயற்கை அனர்த்தங்களால் சேதமுற்றும் காணப்பட்டமையால் திரு.காசிப்பிள்ளை இவ்வாலயத்தை பொழிகற்களால் கட்ட எண்ணி மூலஸ்தானத்தில் உள்ள விககிரகத்தை திருமஞ்சனக் கிணற்றில் இறக்கி வைத்துவிட்டு கற்களை கொணடு பொழிந்து கட்டி முடியும் காலகட்டத்தில் மூலவிக்கிரகத்தை பார்க்கும்பொழுது அதன் திருமுடியும் அங்குசமும் பாசாங்குசமும் ஏந்திய இருகரங்களும் சிதைவுற்றநிலையில் காணப்பட்டமையினால் ஸ்தபதி ஒருவரிடம் புதிய விக்கிரகத்தை முன்னாயத்தங்களை செய்திருந்தார். எனினும் அந்த ஸ்தபதி விக்கிரகத்தை தருமுன் இயறகை எய்திவிட்டார்.

இக்காலப்பகுதியில் திரு.காசிப்பிள்ளை இயற்கை எய்திவிட்டார். இதன காரணமாக ஆலயப்பணிகளில் பின்னடைவு ஏற்பட்டது. அவர்களின் வம்சா வளியினரால் தங்களுக்குள்ளே ஓர் திருப்பணிசபை அமைத்து புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று நாட்டில் ஏற்பட்ட சூல்நிலை காரணமாக இவ்வாலயம் இரு தடவை சோதனைக்கு உள்ளாகி பின்னர் திருமதி காசிப்பிள்ளை என்பவராலும் அவரது பிள்ளைகள் உறவினர்களாலும் இந்த ஆலயம் சிறப்பாக புனரமைக்கப்பட்டு இன்று (09.07.2009) வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.



திருச்சிற்றம்பலம்
முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சொன்னவனே! தூயமெய்ச் சுகத்தவனே! முன்னவனே!
சிற்பானே! ஐங்கரனே! செஞ்வடையஞ் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.
திருச்சிற்றம்பலம்

நல்லை நகரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண மண்ணை அரசாண்ட தமிழ் மன்னர்கள் தொடக்கம் இறுதியாக ஆட்சி செய்த சங்கிலி மன்னன் வரை தினந்தோறும் வணங்கி வந்த தற்போதைய நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயமானது இயற்கை அரண்களாக மருத நிலமும், நெய்தல் நிலமும் புடைசூழ்ந்துள்ள சூழலில் அமைந்துள்ளது.

விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனித் திங்கள் 25 ம் நாள் இன்று (09.07.2009) வியாழக்கிழமை சித்தயோகமும் திருவேண நட்சத்திரமும் கூடிய கன்னி லக்கின சுபவேளையிலே பகல் 10.48 மணி முதல் 12.25 மணிவரையுள்ள மஹா கும்பாபிஷேகம் [illegible] திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் அதற்கு முன் [illegible]ம் பின்னும் நடைபெறும் கிரியா காலங்களிலே வந்து சரீர திருப்பணி புரிந்து [illegible]ம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

காலை 06.30 மணியளவில் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, பிம்பபூருவ சந்தானம், பிம்பபச்சிம சந்தானம், தீபாராதனை, 10.50 மணியளவில் ஸ்தூபி அபிடேகம், மஹ கும்பாவிஷேகம், தசதரிசனம், ஆசீர்வாதம், மஹாஅபிடேகம், விபூதிப்பிரசாதம் வழங்கல்.

பிரதிஷ்டா குருமார்

கிரியா பூஷணம் சு.முரளீதரக் குருக்கள் (அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்), தி. சங்கரராஜக் குருக்கள்- கொழும்புத்துறை, சர்வசாதகர் சோ.வரதராஜ சர்மா - கொழும்புத்துறை, கோயில் அர்ச்சகர் - தெ. கமலநாதசர்மா, யாக சம்ரஷகர் - சோ. சண்முகராஜசர்மா - அரியாலை, சு. ராஜசேகரசர்மா - கொழும்புத்துறை.

ஆலய அறங்காவலர்: திருமதி காசிப்பிள்ளை தங்கக்குட்டியும் அவரின் பிள்ளைகளும்.



வரலாற்றுச் சிறப்புமிக்க புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் விநாயகப்பெருமான் சித்திரத்தேரேறி வலம் வருவதை முதலாவது படத்திலும், பத்தர்கள் பறவைக் காவடிகள் எடுத்து நேர்த்திக்கடன் தீர்ப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: கலைஞன்)

## இறைச்சிக்கு மாடு வெட்ட நயினாதீவில் தடைவிதிப்பு

நல்லூர்,ஜூலை 9

நயினாதீவில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை நயினை தீவு உப அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதேசசபை ஊர்காவற்றுறை பொலிசாருடன் தொடர்பு கொண்டு இறைச்சிக்காக மாடுகளை வெட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நயினாதீவு புனித பிரதேசமாகையால் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கும் மதுபான வகைகளை விற்பனை செய்வதற்கும் அனுமதி இல்லை என்றும் நயினாதீவு உப அலுவலகப் பொறுப்பாளர் ந.மோகனரூபன் தெரிவித்தார். (203-111)


யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும்

அருணகிரிநாத சுவாமி விழா - 2009

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : நாளை (10.07.2009) வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப. 10.30 மணி

சிறப்புச் சொற்பொழிவு: 'வாக்கிற்கு அருணகிரி'

வழங்குபவர் : சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்
வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில்
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை
மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும்
இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
சந்நிதியான் ஆச்சிரமம்


## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தால் முதலாம் திருமுறை நூல் வெளியீடு

வலி.வடக்கு,ஜூலை 9

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தினால் திருஞானசம்பந்த சுவாமிகளினால் அருளப்பட்ட தேவாரத் திருப்பதிகம் அடங்கிய முதலாம் திருமுறை நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்களில் தேவாரத் திருமுறைகளின் திரட்டு இல்லாமை மற்றும் இந்து ஆலயங்களில் தேவாரத் திரட்டு மூலம் அனைவரும் பயன்பெறும் நோக்கமாக கட்டம் கட்டமாக பன்னிரண்டு திருமுறைகளையும் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது முதலாம் திருமுறை அடங்கிய நூல் வெளியிடப்பட்டுள்ளது.

சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் வெளியிடப்பட்டுள்ள இந்தத் திருப்பதிகப் புத்தகத்தை பெற விரும்பும் இந்து ஆலயங்கள் தமது கடிதத் தலைப்புகளில் கடிதங்களை வழங்கி ஆலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என ஆலய தேவஸ்தான சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அறிவித்துள்ளார்.

வெளி மாவட்டங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்து ஆலயங்களும் உரிய முறையில் கடிதத் தலைப்புகளில் தொடர்புகளைக் கொண்டால் நூல்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (203-86)

## நயினாதீவு பிரதான வீதிகளுக்கு 'அமுதசுரபி'யால் மின் விளக்குகள்

நல்லூர்,ஜூலை 9

நயினாதீவுப் பிரதான வீதி உட்பட முக்கியமான குறுக்கு வீதிகளுக்கு மின் வெளிச்சம் வழங்குவதற்கான செலவினங்களை நயினை ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை பொறுப்பேற்கும் என அமுதசுரபி தலைவர் த.சிவானந்தன் தெரிவித்தார்.

அமுதசுரபி அன்னதான சபையின் சமூகப் பணிகள் தொடர்பான முதல் நடவடிக்கையாக வீதிகளுக்கு வெளிச்சம் வழங்கும் பொருட்டு 60மின் குமிழ்கள் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-111)


மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2007 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | சுன்னாகம் -109 | 22.08.2009<br>23.08.2009<br>24.08.2009<br>&<br>25.08.2009<br>26.08.2009 | மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை -030 |
| 2 | சேவை நிலையம், மல்லாகம் -899 | | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர், வடவலயம்.
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கோல்ட் ஒன்' சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் சித்திர ஆக்கத் திறன் கண்காட்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

சிவபூமி மாணவர்களின் புளியங்கொட்டை, மரப்பட்டைகளினால் வடிவமைக்கப்பட்ட சிலந்தி, முதலைகளின் உருவப்படங்களையும், காட்சியில் இடம்பெற்ற பொருள்களை மாணவர்கள் பார்வையிடுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

பார்வையற்றவர்கள் எழுதும் முறைகளை மாணவி ஒருவர் விளக்குவதையும் சிறுவர் பூங்காவின் மாதிரியையும் ஏனைய படங்களில் காணலாம். (111)

### சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக

# முன்னாள் பிரதம நீதியரசர் அடங்கிய ஆயம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மீளாய்வு மனு

### சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் ஒன்றாக ஆஜர்

கொழும்பு, ஜூலை9

'வோட்டர் ஹெட்ஜ்' ஹோட்டல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஏனையோருக்கும் எதிராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான உயர் நீதிமன்ற ஆயத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது. ஆகவே, அத்தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு கோரி ஐந்து சிரேஷ்ட சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் வாதிட்டனர்.

முன்னாள் சட்டமா அதிபர் ஸி.ஆர்.டி. சில்வா, முன்னாள் சட்டமா அதிபர் ஷிப்லி அஸிஸ், ஜனாதிபதி சட்டத்தரணிகளான டி.எஸ்.விஜேசிங்க, மனோ ஹர்தசிங்க, ரொமேஷ் டி.சில்வா ஆகியோரே இந்த மனுவின் மீது ஆஜராகி வாதிட்டனர்.

இந்த மனு நேற்று முன்தினம் பிரதம நீதியரசர் அசோக் டி.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகரட்ண, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மூல வழக்கில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் தீர்ப்பு வழங்கிய நீதியரசர்கள் ஆயத்தில் நீதியரசர் ஷிராணி திலகரட்ணவும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மனுவின்மீது வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணிகளுக்கும் நீதியரசர் ஷிராணி திலகரட்ணவுக்கும் இடையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் நீதிமன்றில் இடம்பெற்றன. இதனால் நீதிமன்ற விசாரணையை பிரதம நீதியரசர் சுமார் ஐந்து நிமிட நேரத்துக்கு ஒத்திவைத்தார். பின்னர் நீதிமன்றம் அதே நீதியரசர்களுடன் கூடியது.

சம்பந்தப்பட்ட தரப்பினரை தங்களது வாதங்களை எழுத்துமூலம் தரும்படி பணித்த பிரதம நீதியரசர் அசோக சில்வா வழக்கை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்திகதியில் பெரும்பாலும் புதிய ஆயத்தினால் இந்த மனு விசாரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய நாடாளுமன்றத்துக்கு அண்மையில் 'கோல்வ்'விளையாட்டுக்கென ஒதுக்கப்பட்ட காணியைப் பின்னர் தனியாருக்குத் தாரை வார்த்து, ஹோட்டல் ஒன்று கட்ட அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவித்து, அதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே அந்த ஹோட்டலை மீள அரசிடமே ஒப்படைத்தல், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இருபத்தியைந்து லட்சம் ரூபா அபராதம் விதித்தல் ஆகியவை உட்பட பல கட்டளைகளை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயம் விடுத்திருந்தது.

அந்தத் தீர்ப்பே நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து முன்னாள் பிரதம நீதியரசர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் இப்போது உயர்நீதிமன்றில் மீளாய்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. நாட்டின் மூத்த - பிரபல - சட்டத்தரணிகள் ஒன்றாக இந்த மீளாய்வு மனுவுக்கு ஆதரவாக நீதிமன்றில் ஆஜராகி வாதாடுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (சி)

### கைத்தொழில் முயற்சியாளருக்கு உபகரணங்கள் கொள்வனவுக்கு உதவி

நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமக்குத் தேவையான இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இரண்டு லட்சம் ரூபா வரை வழங்கும் செயற்றிட்டம் ஆரபிக்கப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் யாழ்.மாவட்ட கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமைக்குமுன்னர் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# எந்தவொரு பாடசாலையிலும் மகனைச் சேர்க்க முடியவில்லை; மனமுடைந்துபோன கணவர் தற்கொலை செய்து கொண்டார்

### மரண விசாரணையில் மனைவி சாட்சியம்

எனது மகனை எந்தவொரு பாடசாலையிலும் சேர்க்க மறுத்துவிட்டனர். முன்னர் பிரபாகன் இருந்ததால் அவர் குண்டு வைத்து விடுவார் என்ற பயத்தில் உங்கள் பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்துக் கொண்டிருப்போம். இப்போ பிரபாகரன் உயிருடன் இல்லாததால் உங்கள் பிள்ளையைச் சேர்க்க முடியாததெனக் கூறிவிட்டனர். எனது கணவர் அவர்களின் காலில் விழுந்து மன்றாடினார். முடியவில்லை. அதனாலேயே அவர் தற்கொலை செய்து கொண்டார்.

தனது மகனைப் பாடசாலையில் சேர்க்க முடியாத காரணத்தால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்ட வரக்காப்பொல கிராம வீதியைச் சேர்ந்த பீ.பெருமாள் குமார் (வயது 40)என்பவரின் மரண விசாரணையில் சாட்சியளித்த போதே அவரது மனைவியான சகுந்தலா இவ்வாறு தெரிவித்தார்.

கேகாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ரொகான் பி.நிஸங்க முன்னிலையில் நடத்த மரண விசாரணையில் சாட்சியமளித்த மனைவி மேலும் கூறியதாவது:

எனது கணவர் கூலிவேலை செய்பவர். இதனால் எமது மகன் பாடசாலைக்குச் சென்றால் தலையில் குட்டுகின்றனர். கேலி செய்கின்றனர். திட்டுகின்றனர். இதனால் அவர் அங்கு தொடர்ந்து கல்வி கற்க மறுப்புத் தெரிவித்து வந்தார்.

இதனால் அப்பாடசாலையிலிருந்து மகனை விலக்கி வேறு பாடசாலையில் சேர்க்க முற்பட்ட போது எந்தவொரு பாடசாலையிலும் எமது மகனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக சில பாடசாலை அதிபர்கள் முன்னர் எனது பிள்ளை கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடம் மன்னிப்புக் கடிதம் கோரினர். மன்னிப்புக் கடிதம் இல்லாவிட்டால் பாடசாலையில் சேர்க்க முடியாது என்றனர். பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் குண்டு வைப்பார் என்ற அச்சம் காரணமாக உங்களது பிள்ளையினைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளலாம். தற்போது பிரபாகரனும் உயிருடன் இல்லை. இந் நிலையில், எக்காரணம் கொண்டும் எந்தவொரு பாடசாலையிலும் சேர்க்க அனுமதிக்க மாட்டோம் என அழுத்தமாகக் கூறினர். இதனால் மிகுந்த கவலை கொண்டு எனது கணவர் மகனை கட்டித்தழுவி உச்சி முகர்ந்த பின்னர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

வரக்காபொல தம்பலதெனிய பாடசாலையில் எமது மகன் 2ஆம் வகுப்பில் கல்வி கற்றான். அங்கு அவனுக்கு சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து 2 மாதமாக பல்வேறு துன்பங்களைக் கொடுத்தனர். வகுப்பாசிரியர் தும்புத்தடியால் அடிப்பார், தலையில் குட்டுவார், தடியால் அடிப்பார், கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டுவார். இதனால் எனது மகன் பாடசாலைக்குச் செல்ல மறுத்தார்.

இதன் காரணமாக அப்பாடசாலையிலிருந்து எனது பிள்ளையை விலக்கி, அம்பேபுஸ்ஸ வித்தியாலயம், வரக்காபொல காமினி வித்தியாலயம், அல்லியத்த வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் அனுமதி கேட்டும் உரிய பயன் கிடைக்கவில்லை. சில பாடசாலை அதிபர்களின் காலடியில் வீழ்ந்து மன்றாடியும் பலன் கிடைக்கவில்லை. இதனால்தான் எனது கணவர் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவித்தார்.

சாட்சியத்தைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி நஞ்சருந்தியதால் உடலில் விஷம் பாய்ந்து உயிரிழந்ததாகத் தீர்ப்பளித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனச் சப்பிரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஹேரத் பீ. குலரட்ன பணிப்புரை விடுத்துள்ளார். இதனைத் தவிர கேகாலை வலயக் கல்விப் பணிப்பாளர் எச்.ஏ.ஹேமாவத்தி தலைமையில் மற்றொரு விசாரணையும் இடம்பெறுகின்றது.

# கிறிஸ்தவ, முஸ்லிம் மத குழுக்கள் அரசுக்கு எதிராகச் சதித்திட்டம்

### ஹெல உறுமய தேரர் இப்படிக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9

கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதக் குழுக்கள் அரசுக்கு எதிராக சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அக் குழுக்களை அரசு இந்த நாட்டில் தடைசெய்ய வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறியது.

நாடாளுமன்றில் இடம் பெற்ற அவசர காலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அக் கட்சியின் தலைவர் வண.எல்லாவல மேதானந்த தேரரே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் ஊழல், மோசடிகள் மலிந்துவிட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அத்துடன் இந் நாட்டில் இயங்கிவரும் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயக்குழுக்களை அரசு தடைசெய்ய வேண்டும். இக்குழுக்கள் சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நாட்டில் எல்லா பகுதிகளிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. ஆனால் வவுனியாவில் அவ்வாறு செய்யப்படுவதில்லை. அதற்காகத்தான் இந்தக் குழுக்களை தடை செய்ய வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

அரசுக்கு எதிரான ஆவணங்கள் அடங்கிய சீடி ஒன்றுடன் மதபோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அரசுக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. வவுனியா அகதி முகாம்களில் உள்ள மக்களின் இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றி முடிக்கப்படாதவரை இந்த மக்களை மீள்குடியமர்த்த முடியாது. அது அம்மக்களை நாம் கொலை செய்ததாக அமைந்துவிடும்- என்றார். (சி)



அரச வைத்தியர்களின் வேலை நிறுத்தத்தினால் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஒரு மணி நேரம் சிகிச்சைகள் ஸ்தம்பித்தன. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பொது நூலகம் ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லக்ஷ்மன்)

# முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஜூலை 9

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராகக் கண்டியைச் சேர்ந்த டி.கே.ஏ.பத்மசிறி பாலசூரிய என்பவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். சாதாரண பிரஜையான அவர் தாமே இவ்வழக்கில் தமக்காக ஆஜராகி நீதிமன்றத்தில் வாதாடவிருக்கின்றார் எனத் தெரிவித்தார்.இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நான் மல்வத்தை பௌத்த பீடத்துக்கு எதிராகக் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தேன். ஆனால் பௌத்த பீடத்துடன் சேர்ந்து கொண்டு கண்டி நீதிபதிகள் இந்த வழக்கில் சரியாகச் செயற்படவில்லை. அதை ஆட்சேபித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச்செய்து இந்த வழக்கை கண்டியிலிருந்து கொழும்பு மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றும் உத்தரவைப் பெற்றேன்.

ஆனால் இச்சமயம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக வந்த சரத் என்.சில்வா, கண்டி மாவட்ட நீதிபதியுடன் கலந்துரையாடி மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை மாற்றம் செய்தார். இதனை ஆட்சேபித்து நான் உயர் நீதிமன்றில் முறையிட்டேன்.

இதற்கிடையில் சரத் என்.சில்வா பிரதம நீதியரசராகிவிட்டார். என்மீது அவர் தனிப்பட்ட வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதனால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 294 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டேன்.

சரத் என்.சில்வா தனிப்பட்ட முறையில் தமது பதவி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து என்னைத் துன்புறுத்தியுள்ளார். அவர் பதவியில் இருக்கும் வரை நீதிமன்றத்திடம் நியாயம் பெற முடியாது என அஞ்சினேன். அதனால் அவர் பதவியிலிருந்தும் அதிகாரத்தில் இருந்தும் வெளியேறியதும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நான் தாக்கல் செய்கிறேன்.

-இப்படி அவர் மனுவில் தெரிவித்துள்ளார். (சி)

# அணு ஆயுத குறைப்பு தொடர்பாக அமெரிக்கா - ரஷ்யா ஒப்பந்தம்

மாஸ்கோ, ஜூலை 9

அமெரிக்காவும் ரஷ்யாவும் அணு ஆயுத குறைப்பு சம்பந்தமான உடன்படிக்கை யொன்றை எட்டுவதற்காக பேச்சுகள் நடத்தவுள்ளன. இப்பேச்சுகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் மாஸ்கோவில் கைச்சாத்தானது.

ரஷ்ய விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும், ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வடேவுக்குமிடையே திங்கட்கிழமை, கிரெம்ளினில் பேச்சுகள் இடம்பெற்றன. மூன்று மணித்தியாலய பேச்சுகளுக்குப் பின்னர், புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்படும் பேச்சுகள் மூலமாக, அணு ஆயுதங்கள் குறைப்பு தொடர்பான ஒப்பந்தம் எட்டப்படும். இந்த உத்தேச ஒப்பந்த அடிப்படையில், இரு நாடுகளும், ஏழு வருடங்களுக்குள் தத்தம் அணு வாயுத எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளும். எண்ணிக்கையில், ஆயிரத்து 700 இற்கும் கீழ் இந்த ஆயுதங்கள் குறைக்கப்பட்டு விடும்.

இந்த ஒப்பந்த அடிப்படையில் அணு ஆயுதங்கள், ஆயுத வினியோ கங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கி ஏவுகணைகள், குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவற்றின் உற்பத்தி எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, மூன்று நாள் ரஷ்ய விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை தமது பாரியார் மிசேல், புதல்விகள் சாஷா, மலியா ஆகியோர் சகிதம் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவை வந்தடைந் தார். அவருக்கு ரஷ்யாவின் சார்பில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஒபாமா தனது பயணத்தின் முதல் நாளில் ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வடேவை சந்தித்துப் பேசினார். சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது இரு தலைவர்களும் முக்கியமான விவகாரங்கள் குறித்து விவாதித்தனர்.

இதையடுத்து, இரு தலைவர்களும் கூட்டாகப் பத்திரிகையாளர்களை சந்தித்துப் பேட்டியளித்தனர். பின்னர் திமித்ரி மெத்வடேவ் குடும்பத்தினர் ஒபாமா குடும்பத்தாருக்கு விருந்தளித்தனர்.

பனிப்போர் காலத்தில் ரஷ்யாவும், அமெரிக்காவும் கீரியும் பாம்புமாக இருந்தன. அன்றுமுதல் இன்றுவரை இரு நாடுகளிடையே சுமுகமான உறவு என்பது கனவாகவே இருந்து வருகிறது.

இதுபோன்ற நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்ய பயணம் மேற்கொண்டுள்ளமை இருநாட்டு மக்கள் மத்தியிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இருநாடுகளிடையே மீண்டும் சுமுகமான உறவு தொடரும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. (அ-சி)

## துன்பமும் அவசியமே?.....

இன்னொரு சமயம் கிருஷ்ணன் பலராமனிடம் 'அம்மா வீட்டில் இருக்கிறாளா?' என்று கேட்டான். அதற்குப் பலராமன் 'யசோதையா உனக்குத் தாயார்? இல்லை அவளுக்கு நல்ல நிறம். நந்தனுக்கும் நல்ல நிறம். உன் நிறமோ கறுப்பு' என்று கூறினான். உடனே கிருஷ்ணன் யசோதையிடம் ஓடிச் சென்று, 'நீ என் அம்மா இல்லை என்று அண்ணன் சொல்கிறான். அவன் கூறுவது உண்மையா?' என்று கேட்டான். யசோதை, 'ஆமப்பா, பலராமன் சொல்வது உண்மைதான். நீ தேவகி மைந்தன். எனக்கு ஆண் குழந்தை எதுவும் இல்லை''.

இறைவன் மனித வடிவம் கொள்ளும் போது சிலர் துன்பப்பட்டே ஆக வேண்டும். அத்துன்பம் நேராமல், தெய்வத்துவத்தைப் புரிந்து கொள்ள இயலாது. கரும்பை நசுக்கி சாறு பிழிந்து, அச்சாற்றைக் கொதிக்க வைத்து, பலவற்றைச் சேர்த்து அதிலிருந்து வெல்லமோ, சர்க்கரையோ பெறவேண்டும். பிறகு அந்தச் சர்க்கரையைக் கொண்டு, கோப்பி, தேநீர், குளிர்பானங்கள், பல்வேறு இனிப்பு வகைகளைச் செய்து அவற்றை நீ உண்டு, அருந்திப் பருகி மகிழலாம்.

அவதாரங்களின் பெற்றோர்களும் பல துன்பங்களை அனுபவித்தனர். தேவகி ஒரு சமயம், ''கிருஷ்ணனைச் சுமந்து பெற்றவள் நான். ஆனால் அவனது குறும்புகளையும் விளையாட்டையும் யசோதைதான் அனுபவிக்கிறாள்'' என்று புலம்பினாள். அதே போல கௌசல்யாவும்இராமன் தன்னை விட்டுப் பிரிந்து 14 வருடங்கள் காட்டில் வசித்த போது, பிரிவினால் துன்பம் அனுபவித்தாள்;



இராமன் காட்டிற்குச் சென்றது ஏன்? தந்தையின் வாக்கு, எவ்வளவு கடினமாக இருந்தாலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டவே இராமன்காட்டுக்குச் சென்றார். அவதார புருஷர் உலகில் பல செயல்கள் புரிய வேண்டியுள்ளது; சிலருக்கு அவற்றை ஏற்றுக் கொள்வது மிகக் கடினமாக இருக்கும்.

சாயி சிந்தனை


## எங்கள் அதிபரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சி.மாணிக்கராஜா S.L.P.S. -1
(B.A. (HONS). Dip. in Edu, M.ed
S.P.L.S - CANADA
அதிபர், யா/சன்மார்க்க ம.வி)

அவர்கள் எமது பாடசாலை கல்வியாலும், பௌதீக வளங்களாலும் ஓங்கி உயர்ந்து திக்கெட்டும் புகழ் பரப்ப, அயராது உழைத்து நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்வதைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுச் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி க. விஜயபாலன்,
திரு.வி. செந்தூரன்,
(கல்விசாரா ஊழியர்கள், யா/சன்மார்க்க ம.வி.)

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (86882)


## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் சந்திரமலர்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரமலர் நேற்று முன்தினம் (07.07.2009) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் சி. ஆறுமுகத்தின் (முன்னாள் மேற்பார்வையாளர், ஓட்டுத் தொழிற்சாலை, ஒட்டி சுட்டான்) அன்பு மனைவியும், வாமதேவன் (பட்டயக் கணக்கியல் மாணவன்), கரன் (இ.போ.ச. வடக்கு), வானதி (மொழியியல் துறை, 3ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.07.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 91, சட்டநாதர்வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர், யாழ்ப்பாணம். (86864)

தகவல்: குடும்பத்தினர்


## பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு முகாமையாளர், தொலைபேசி இயக்குனர்கள், கணனி இயக்குனர்கள் தேவை. அண்மையிலிருப்பவர்கள் விரும்பத்தக்கது. (இருபாலாரும்) விண்ணப்பிக்கலாம்.

கணேசன் கொமினிக்கேஷன்ஸ்
கே.கே.எஸ் .வீதி, கொக்குவில் சந்தி,
T.P: 2222585

## விற்பனைக்கு

வடமராட்சி நெல்லியடி, கொடிகாம வீதி சாமியன் அரசடியில் 5 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குள்ளது.

தொடர்பு: ம.பாலசுப்பிரமணியம்,
சாமியன் அரசடி,கரவெட்டி.
T.P: 0212264122, 0775386235 (சி/559410)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியுடைய நாகலிங்கம் சின்னத்தம்பி என்பவரது தேசிய அ. அட்டை (470733012V) சாரதி அனுமதிப் பத்திரம் என்பன 05.07.2009 அன்று ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதிகளுக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் [illegible] நீராவியடி என்னும் முகவரியுடனோ அல்லது 0715240752 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ [illegible] கொள்ளவும்.


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
மாரிமுத்து பொன்னுச்சாமி

([illegible])

பிரபல சமூக சேவையாளராகவும் பாரிய தருமப் பணிகளை நிறைவாக்கி வாழ்ந்து வந்தவருமான அமரர் மா.பொன்னுச்சாமி குடும்பத்தினர் பறாளை ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி ஆலய நிறைவு பெறாதிருந்த கோபுர திருப்பணியை நிறைவாக்கி எங்களை எல்லாம் கோபுர தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெற வைத்தவர்கள். இவர்கள் பணியை நாம் மறப்பதற்கில்லை.

இவ்வாண்டு நடைபெற்ற ஆலய வருடாந்த திருவிழாவில் கலந்து முருகன் அருள்பெற்றுச் சென்ற அமரர் மா.பொன்னுச்சாமி டென்மார்க் நாட்டுக்குச் சென்று 01.07.2009இல் முருகன் பாதத்தைப் பற்றியுள்ளார். இவரது மறைவு எங்கள் யாவருக்கும் பேரிழப்பாகும். இவ்வேளை இவரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறி எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பறாளை ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி ஆலய
தர்மகர்த்தா சபையார்

பறாளை,
சுழிபுரம். (சி/559411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சட்டத்துக்கு உட்பட்டு தமிழருக்கு அதிகாரம் வழங்கப்படும்

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் சென்னையில் பேட்டி

சென்னை, ஜூலை 09

இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கை தூதர் ரோமேஷ் ஜெயசிங்க கூறினார்.

'இலங்கையில் போருக்கு பிந்தைய நிலைமை, இந்தியாவின் பங்கும்' என்ற தலைப்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாகப் போர் நடந்து வந்தபோதிலும் இந்தியா - இலங்கையிடையே இருதரப்பு உறவு எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. இருநாடுகளும் செய்துகொண்ட தங்குதடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக ஆண்டுக்கு 300 கோடி டொலர் அளவுக்கு வர்த்தகம் நடந்து வருகிறது.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேச விரும்பினார். ஆனால், அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர்.

அந்தச் சூழ்நிலையிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுக்காக அரச அதிகாரிகள் அடங்கிய குழுவை ஜெனீவாவுக்கு அனுப்பினார்.

ஆனால், ஜனாதிபதி மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் விடுதலைப் புலிகள் தவறாக கருதி தொடர்ந்து இராணுவத்திற்கு எதிராக தாக்குதல்களை நடத்திக்கொண்டே இருந்தனர்.

இனிமேல் முயற்சி மேற்கொண்டு பயனில்லை என்ற முடிவுக்கு வந்த பின்னர்தான் விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒழிக்க தீர்மானிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் தொடங்கிய இராணுவத் தாக்குதல் கடந்த மே மாதம் வரை நீடித்து விடுதலைப் புலிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டனர்.

இலங்கை அரசு மேற்கொண்ட ஏதாவது ஒரு அமைதி முயற்சிக்கு புலிகள் ஒத்துழைப்பு அளித்திருந்தால் இப் பிரச்சினை இந்தளவுக்கு வந்திருக்காது. இவ்வளவு உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுவாழ்வு பணிகள் நடந்து வருகின்றன. இந்தப் பணிகளுக்கு ரூபா 500 கோடி வழங்குவதாக அறிவித்துள்ள இந்திய அரசுக்கும் உரிய நேரத்தில் ரூபா 25 கோடி நிதி உதவி வழங்கிய தமிழக அரசுக்கும் இலங்கை அரசு சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வடக்குப் பகுதியிலும் விரைவில் மாகாண முறைமை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும். இலங்கை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் தேர்தல் நடத்துவது என்பது பெரிய சாதனை - என்றார்.

பின்னர் இலங்கை தூதர் ரோமேஷ் ஜெயசிங்க செய்தியாளர்களிடம் கூறுகையில் -

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. கண்ணிவெடிகளை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

போரால் புலம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதில் அரசுக்கு எவ்வித தயக்கமும் இல்லை. இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் - என்றார்.

# லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஜக்ஸனின் உடல் அடக்கம்




லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 09

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் உடல் செவ்வாய்க்கிழமை, இலங்கை நேரப்படி இரவு அடக்கம் செய்யப்பட்டது. உடல் அடக்கம் செய்யப்பட்ட போது, அவரது குடும்பத்தினர் மட்டும் உடனிருந்தனர்.

எனினும், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் லட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டிருந்தனர். ஜக்ஸனின் உடல் அடக்கத்தை முன்னிட்டு, பிரபலங்கள் பங்கேற்ற இறுதிச் சடங்கு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

உலகையே தனது இசையாலும், நடனத்தாலும் கட்டிப்போட்ட பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன், கடந்த 25 ஆம் திகதி மரணமடைந்தார். ஜக்ஸனின் மரணத்தில் பல்வேறு சர்ச்சைகள் கிளம்பின. இந்நிலையில், அவரது இறுதிச் சடங்குகளை நடத்த அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

அதன்படி, அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அவரது உடல் செவ்வாய்க்கிழமை இரவு (இலங்கை நேரப்படி) அடக்கம் செய்யப்பட்டது. அவரது உடல் அடக்கத்தின்போது, பொதுமக்கள் மற்றும் ரசிகர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில், ஜக்ஸனின் முன்னாள் மனைவி டெபி ரோ பங்கேற்கவில்லை. அது குறித்து அவரது சட்டத்தரணி கூறுகையில், "டெபி ரோ வந்தால், அவரையே தொலைக்காட்சி கேமராக்கள் மிகைப்படுத்தும். அதனால், மைக்கல் ஜக்ஸனின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின் முக்கியத்துவம் குறைந்துவிடும் - என்றார்.

# மீனவர் தாக்கப்படுவதைத் தடுக்கக் கோரி தமிழகத்தில் இன்று முதல் ஆர்ப்பாட்டம்

## விஜயகாந்த் அறிவிப்பு



சென்னை, ஜூலை 09

இலங்கைக் கடற்படையால் இராமேஸ்வரம் மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசுக்கு எதிராகவும், பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்தும் தமிழகம் முழுவதும் தே.மு.தி.க. சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் - என்று அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பெற்றோலியப் பொருள்களின் விலையை மத்திய அரசு உயர்த்தியிருப்பதைக் கண்டித்தும், அதை குறைக்க வலியுறுத்தியும், இலங்கை கடற்படையால் இராமேஸ்வரம் மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும் தமிழகம் முழுவதும் தே.மு.தி.க. சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

ஆர்ப்பாட்டங்கள் 9ஆம் திகதி (இன்று) முதல் 18ஆம் திகதி வரை நடத்தப்படும். எல்லா மாவட்டங்களிலும் மத்திய அரசு அலுவலகங்கள் அல்லது கலெக்டர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடக்கும். இதற்கு மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமை வகிப்பார்கள் - என்றார்.

# கனேடிய அமைச்சர் இலங்கை விஜயம்

கொழும்பு, ஜூலை 9

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான தீபக் ஒபராய் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இவர் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைச் சந்தித்து, வவுனியா அகதிகளின் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் அஞ்சலா ஜே.போக்டன் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிவாரணக் கிராமங்களில் வசிக்கும் மக்களின் மனிதாபிமான நிலைவரம் குறித்தும் அவர்களின் மீள்குடியேற்றம் குறித்து ஆராயும் முகமாகவும் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது இலங்கைக்குத் தேவையான உதவிகளை கனடா வழங்குமென உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# மதுபானத்தின் விலைகள் 50 ரூபாவால் உயரும்!

கொழும்பு, ஜூலை 09

மதுபான வகைகளின் விலைகள் 50 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் டி.எம்.ஜயரட்ண நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குறைநிறைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மதுபானம் இப்போது பெரும் பிரச்சினையாக எழுந்துள்ளது. மதுப் பாவனையைக் கட்டுப்படுத்த நாம் பல நடவடிக்கைகளை எடுக்கின்றபோதிலும் அதை நூறு வீதம் கட்டுப்படுத்த முடியாது.

நாம் பயன்படுத்துகின்ற எல்லா உணவுகளிலும் மது சேர்ந்துதான் உள்ளது. அந்த மதுவைத் தனியாகப் பிரித்து அருந்துவதுதான் பிரச்சினையாகவுள்ளது.மது அருந்துவது உண்மையில் பிரச்சினைக்குரிய விடயமல்ல. மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் அதைப் பயன்படுத்துவதுதான் பிரச்சினை.

சிலர் மதுவை மூக்குமுட்ட அருந்திவிட்டு வீதிகளில் விழுந்து கிடக்கின்றனர். சண்டை போடுகின்றனர். மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான நடைமுறை இல்லாதொழிக்கப்படல் வேண்டும். மதுவை அளவோடு அருந்தவேண்டும். எமது முன்னோர்கள் உடலுக்குத் தேவையான விதத்தில் மதுவைப் பாவித்தனர். அப்படிப் பாவித்தால் எந்தப் பிரச்சினையுமில்லை.

துட்டகைமுனு மன்னன்கூட மது அருந்திவிட்டுத்தான் சண்டைக்குச் சென்றிருக்கிறார். புத்தபெருமானின் காலத்திலிருந்து மது பாவனை உள்ளது.

மதுவில் பிரச்சினை இல்லை. மது அருந்தும் மனிதர்களால்தான் பிரச்சினை. மது பானத்தின் விலை விரைவில் 50 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது - என்றார்.

(சி)

# அதிபர் கொல்லப்பட்டமையைக் கண்டித்து வவுனியா தமிழ் பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

வவுனியா, ஜூலை 09

வவுனியா மாவட்டத்தின் தமிழ்ப் பாடசாலைகள் நேற்று ஒருநாள் வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

கடந்த 4ஆம் திகதி பாரதிபுரம் பாடசாலையின் அதிபர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே குறித்த பாடசாலைகள் மூடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது என குறித்த தமிழ்ப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு வவுனியாவிலுள்ள தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சி)

## மென் பந்தாட்டம்

வலி.வடக்கு,ஜூலை 9

யாழ். மாவட்ட மதுவரித்திணைக் களத்தினால் யாழ். மாவட்ட மதுவரித் திணைக் களங்களுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

8 ஓவர்கள் 9 பேர் பங்கு பற்றும் இப் போட்டியில் யாழ்.மாவட்ட பிரதேச மதுவரித்திணைக்கள அணிகள் அனைத் தும் கலந்து கொள்ளவுள்ளன.

(1-86)

# நாங்கள் சொன்னதெல்லாம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் ஐவரும், வன்னியிலிருந்து பொதுமக்களோடு சேர்ந்து வெளியேறிய போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தற்போது சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்கள் ஐவரும் நேற்று கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

''வன்னி யுத்தத்தில் மொத்தம் ஆயிரம் பேர் வரையிலான குறைவான பொதுமக்களே கொல்லப்பட்டனர். கிளிநொச்சி யுத்தத்தில் மக்களுக்கு உயிரிழப்பு ஏற்பட்டிருக்கவில்லை. முல்லைத்தீவில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் 15ஆம் திகதி வரை 300 - 350 வரையிலான பொதுமக்களே பலியாகினர். சுமார் 600 பேர் காயமடைந்தனர். அதன் பிறகு ஏப்ரல் 15 தொடக்கம் மே 15 ஆம் திகதிவரை - இறுதி ஒரு மாத காலத்தில்- மேலும் 400 வரையான மக்கள் பலியாகினர். சுமார் 600 பேர்வரை காயமடைந்தனர். அவ்வளவுதான்'' - என்றார் டாக்டர் வரதராஜன்.

''நாங்கள் வன்னிக்குள்ளிருந்துகொண்டு ஊடகங்களுக்குத் தெரிவித்த தகவல்களில் எந்த உண்மையுமில்லை. எல்லாம் சுத்தப் பொய். அப்படி பொய்த் தகவல்களை வெளியிடும்படி புலிகள் எங்களைப் பலவந்தப்படுத்தினார்கள். தங்களுக்கு ஆதரவான ஊடகங்களுக்கு இப்படியான பொய்த் தகவல்களை தொலைபேசி மூலம் வழங்குமாறு புலிகள் வற்புறுத்தினர். அதுதான் நடந்தது'' என்றார் டாக்டர்.

டாக்டர் வரதராஜன் கூறிய தகவல்களை ஏனைய டாக்டர்களும் ஆமோதித்தனர்.

''முன்னர் புலிகளின் அழுத்தத்தால் அப்படிக் கூறிய நீங்கள் இப்போது அரசின் அழுத்தத்தால் இப்படிக் கூறுகிறீர்கள் என்று சந்தேகம் எழுகிறதல்லவா...?'' என்று ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, ''இல்லை... இல்லை... அப்படி எந்த அழுத்தமும் இப்போது எங்களுக்கு இல்லை. அரசு எங்களை நன்றாகப் பராமரிக்கிறது. நாங்களும் அவர்களது விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குகிறோம்'' என்று மருத்துவர்கள் கூறினர்.

''சரி., சுமார் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வன்னியில் இருந்தனர் என்று அரச செயலகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 3 லட்சம் வரையான மக்களே அகதி முகாம்களுக்கு வந்துள்ளனர். அப்படியென்றால் ஏனையவர்கள் எங்கே...?'' என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார்.


''கச்சேரியின் புள்ளி விவரங்கள் தவறாக இருக்கலாம். கடந்த ஒரு சில வருடங்களாகப் புள்ளி விவரம் எடுக்கப்படவேயில்லை. எனவே, அந்த புள்ளி விவரங்கள் சரியானவை என எப்படிக் கூறமுடியும்...? எது எப்படியோ, வன்னி யுத்தத்தில் தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்று நாங்கள் முன்னர் கூறியது பொய். புலிகள் கூட பொதுமக்கள் மீது சுட்டனர். சிறுபிள்ளைகளையும் வலுக்கட்டாயமாகப் படைக்குச் சேர்த்தனர். யுத்தத்தில் காயமடைந்த சிறு பிள்ளைகளுக்கு நாங்களே சிகிச்சை அளித்திருக்கின்றோம். புலிகள் மீது கொண்ட வெறுப்புக் காரணமாகத்தான் மக்கள் அரச பகுதிக்கு வந்தனர்'' என்று டாக்டர்கள் உறுதியாகக் கூறினர்.

இறுதியாக டாக்டர் சிவபாலன் சொன்னார் ''தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறையுடன் இருக்கிறார். அதற்கான நிலைமைகள் சர்வகட்சிக் கூட்டங்களின்போது தெரிகின்றன. எனவே தமிழர்கள், ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். குறிப்பாக புலம்பெயர்ந்த எமது தமிழ் மக்களும் தமிழீழம் என்ற பேச்சைக் கைவிட்டு அதிகாரப் பகிர்வு ஒன்றின் மூலம் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற உண்மையைப் புரிந்துகொண்டு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்''.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லலும்



## அமரர்
## கந்தையா இரத்தினம்
(இரத்தினம் கடை, ஓட்டுமடம் சந்தி)

தோற்றம்:
12.09.1941

மறைவு:
10.06.2009

கடந்த 10.06.2009 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்
தலைவரின் வீட்டுக்கிருத்திய
நிகழ்வுகள் நாளை (10.07.2009)
வெள்ளிக்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறவுள்ளதால்
அத்தருணம் எமது உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் வருகைதந்து
அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு
அன்புடன்கேட்டுக்கொள்கின்றோம்.
அத்துடன் எமது தந்தையாரின்
மரணச் செய்தி கேட்டு வருகை
தந்த அனைத்து உள்ளங்களுக்கும்
எமது நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

இல. 234/10, சென். செபத்தியார் லேன்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் கலாசார நிலையம் அமைக்க இந்தியா உதவும் - தூதுவர் அலோக் பிரசாத்

வடமராட்சி, ஜூலை, 9

யாழ்.நகரில் கலாசார நிலையம் ஒன்றை அமைக்க இந்தியா உதவவிருக்கின்றது என்று இந்தியத் தூதர் அலோக் பிரசாத் தெரிவித்தார்.

இருநாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப் பாணம் வந்த அவர் நேற்று பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு வந்திருந்தார். அங்கு பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தூதர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

சுவாமி சித்ரூபானந்தா யாழ்.வருமாறு பல தடவை அழைப்பு விடுத்து வந்தார். தற்போது அவரின் விருப்பத்தின் பேராலும் தியாகத்தாலும் அது நிறைவேறியுள்ளது. இங்கு நடைபெற்ற மாணவிகளின் கலாசார நிகழ்ச்சிகள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அதற்கு எனது பாராட்டுக்கள்.

நலன்புரி நிலையங்களில் உள்ள உங்கள் உறவுகள் விரைவில் சொந்த வாழ் விடங்களுக்கு திரும்பி கௌரவமாக வாழ்வதற்குரிய நவடடிக்கைகளை இலங்கை அரசுடன் இணைந்து இந்தியா மேற்கொள்ளும்.

யாழ். குடாநாட்டு மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் அறிந்து இந்தியா அதற்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை நேரில் கண்டறிவதற்கே யாழ். வந்துள்ளேன். யாழ். அரசாங்க அதிபருடன் பல்வேறு இடங்களை பார்வையிட்டுள்ளேன். யாழ். நகரில் கலாசார நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு இந்தியா உதவும்.

இந்த அன்னையின் ஆச்சிரமத்துக்கு இந்தியா தொடர்ந்து உதவுவதாகவும் தொடர்ந்து உதவி வழங்கப்படும் எனவும் தூதுவர் கூறினார். சுவாமி சித்ரூபானந்தா மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கும் தூதுவர் நினைவுப் பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் க.கணேஷும் உரையாற்றினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் குருபூர்ணிமா மலரை தூதுவரும் அரச அதிபரும் வெளியிட்டுவைத்தனர். (1-236)

## தேர்தல் வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குறைநிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றிய கூட்டமைப்பு உறுப்பினரான என்.ஸ்ரீகாந்தாவே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. நாம் 2001 இல் நாடாளுமன்றத்திற்கு வந்தது முதல் அரசியல் தீர்வையே வலியுறுத்தி வருகிறோம். யுத்தத்தை அல்ல.

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும், 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் இதற்காகவே வாக்களித்து மக்கள் எம்மை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்தனர்.

அரசும் புலிகளும் மோதலில் ஈடுபடாது பேச்சில் ஈடுபட்டு அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவர வேண்டும் என்று நாம் கூறினோம்.

இந்த நிலையில் 2006 இல் யுத்தம் ஏற்பட்டது. இதில் அரசு வெற்றி பெற்றுள்ளது. புலிகள் தோல்வியடைந்துள்ளனர். இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

நாம் எமது மக்களுக்காகவே பாடுபடுகிறோம். அதற்காகவே தேசிய நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வகட்சிக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டோம்.

### நல்லதோர் ஆரம்பம்

இதை நல்லதோர் ஆரம்பமாகவே நாம் பார்க்கின்றோம். இதன் அடிப்படையில் இடம்பெயர்ந்த அகதிகள் மீளக் குடியமர்த்தப்படல் வேண்டும். இதுதான் இப்போதுள்ள பாரிய பிரச்சினை.

அகதி முகாம்களில் உள்ளவர்களின் உறவினர்கள் இவர்களை வெளியே எடுத்து பராமரிக்க விரும்புகின்றனர். அதற்கு அரசு இடமளிக்க வேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் அதற்குள்ள தலையிடி குறையும். மனித அவலம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளலாம்.

இந்த மக்கள் அகதிகளாகியமைக்கு இந்த அரசு மட்டும் காரணமல்ல. அனைவருமே காரணம். மனதில் உள்ள குரோதங்கள் கலைக்கப்பட்டு, இந்த அகதிகள் இது விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

இந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு யோசனை அவசியமாகின்றது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்புதான் தீர்வு முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி 'த ஹிந்து' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டு ஜனாதிபதி உடனடியாக அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். தேர்தல் எப்பொழுதாவது வரலாம். அதுவரை மக்களைக் காக்க வைக்க முடியாது.

இந்த அரசு முன்கொண்டு செல்லும் அனைத்து நல்ல நடவடிக்கைகளுக்கும் நாம் முழு ஆதரவை வழங்குவோம். ஆகவே, தீர்வுத் திட்டம் உடனடியாக முன்வைக்கப்படவேண்டும் என்றும் அகதிகள் உடனடியாக மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் நாம் ஜனாதிபதியிடம் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் பொன்னுச்சாமி

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் பொன்னுச்சாமி நேற்று(08.07.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - இளைய பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென் றவர்களான கனகசபை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமக னும் விமலாதேவியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரன் (உப தபாற் கந்தோர், புத்தூர்), கோபாலேந்திரன் (பொதுச் சுகா தார பரிசோதகர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற புலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜா, வனிதா ஆகியோரின் அன்பு மாமனும் துவார்கா, நிதர்சன், தூபிகா, சஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் நல்லையா, கனகம்மா, நாகபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.07.2009) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாதரவத்தை,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கோபாலசிங்கம் பாலமுரளி



இல.03, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் பாலமுரளி காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலசிங்கம் (இரத்தினம்), ஜெயலக்சுமி (தவம்) தம்பதிகளின் பாசமிகு மகனும், சிவனேசன் (மேல்நீதிமன்றம், யாழ்ப் பாணம்), சிவபாலன் (பிரான்ஸ்), இந்திரவதனா, ஜனார்த்தனி, ஜனார்த்தனன் (யாழ்.போதனா வைத்திய சாலை மின்சார பிரிவு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புனிதகுமாரி, விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர், யோகராசா, சின்னராசா, கோபாலகிருஸ்ணன் மற்றும் சண்முகராசா, அருளானந்தம், பராசக்தி, பத்மராணி, பிறேமா, ருக்மணி ஆகியோரின் மருமகனும், சுப்பையா, சிவபாக்கியம், மருதவாணர், நகுலேஸ்வரி, சிவசோதி, கலாமதி, ஆகியோரின் பெறாமகனும், கௌதமி, கௌதமன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.07.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரியடி, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நடராஜா சிவக்கொழுந்து



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கொய்யாத்தோட்டத்தில் வாழ்ந்து வந்தவருமாகிய திருமதி நடராஜா சிவக்கொழுந்து நேற்று (08.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா -லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் கோகிலகானம், தட்சனேஸ்வரன், பிறேமகானம்,விஜய்கானம், தயானேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பென்றோ, அற்புதமலர் (சாந்தினி), சுப்பிரமணியம், பாலரட்ணம், சுபாசினி, துஷா ஆகியோரின் அன்பு மாமியும் டயானா, விக்ரோறியா, சமிதா, பாலகௌரி,கௌசல்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.07.2009) வியாழக்கிழமை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/1, பால்குளம் ஒழுங்கை,
புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### தம்பு நடராஜா

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா நேற்றுமுன்தினம் 07.07.2009 ஜேர்மனியில் காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2009) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி,
மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக்கிளை யின் முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் அவர்களின் சகோதரரான

### சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள், இலங்கை வங்கி,
சுன்னாகம் மேற்தரக்கிளை.

## கண்ணீர் அஞ்சலி

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செல்லத்துரை பேரின்பநாதனின் அன்பு மாமனார்

### அமரர் ஆ.சண்முகலிங்கம்

08.07.2009 அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்,
சாவகச்சேரி

ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசார ஊழியர்கள்,
அபிவிருத்திச்சபையினர்

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சண்முகலிங்கம்

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சண்முகலிங்கம் நேற்று(08.07.2009) புதன்கிழமை மாலை காலமானார்.

காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - பொன்னு தம்பதியரின் மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் சிறிதரன், கலாதேவி, கிரிதரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோககாந்திமதி, பேரின்பநாதன் (அதிபர், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), உஷாநந்தினி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சுப்பையாவின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்புச் சகோதரனும் மேருயா(மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கபில்ஜா, ஹிஸோக்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.07.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
செ.பேரின்பநாதன் (மருமகன்),
(அதிபர், யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்).

## மரண அறிவித்தல்

### செல்வன் கிருஷ்ணலிங்கம் அனுஷன்



சண்டிலிப்பாய் வீதி, பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த செல்வன் கிருஷ்ணலிங்கம் அனுஷன் நேற்று (08.09.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணலிங்கம் (உப தபாலதிபர், பிரான்பற்று) -கலையரசி(ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகனும் சுகிர்தா, மகிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி - பாலசரஸ்வதி, இராசரத்தினம்-ஜெகதீஸ்வரி (மங்களா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் பரமசிவம் - சாந்தி, அசோக்குமார் - எழிலரசி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் யோகராசா - சந்திரா, மதியழகன் - லோகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அடக்கத்துக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

தகவல்:
தந்தை (க.கிருஸ்ணலிங்கம்
-உபதபாலதிபர் - பிரான்பற்று).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 லட்சம் அகதிகளையும் பராமரிக்க நாள் ஒன்றுக்கு 25 கோடி ரூபா தேவை!

## அமைச்சர் ஜயரட்ண தகவல்

கொழும்பு, ஜூலை 9

அகதி முகாம்களில் உள்ள 3 லட்சம் மக்களைப் பராமரிப்பதற்கு நாளொன்றுக்கு 25 கோடி ரூபா தேவைப்படுகின்றது என்று அரசு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குறைநிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டி.எம்.ஜயரட்ணவே இதைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு மக்கள் 30 வருடங்களாகத் துன்பங்களை அனுபவித்தவர்கள். வடக்கு மக்களில் 3 லட்சம் பேர் இப்போது அகதி முகாம்களில் அகதிகளாகவுள்ளனர்.

இந்த மக்களின் அன்றாட தேவைக்காக எமது அரசு தினந்தோறும் பெரும் தொகையான பணத்தைச் செலவழிக்கின்றது. ஒரு நாளுக்கு மாத்திரம் 25 கோடி ரூபா இதற்காகத் தேவைப்படுகின்றது.

இந்த மக்களின் வாழ்வை மேம்படுத்த ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். வடக்கின் வசந்தத்தின் ஊடாக வடக்கை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல் கிழக்கின் எழுச்சிக்காகவும் அதிக பணம் செலவிடப்படுகின்றது. அங்கு வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. இன்னும் பல அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்றுமதியை அதிகரிக்க பல திட்டங்களை வகுக்கவேண்டும்.

ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைப்பதற்காக ஏற்றுமதிக் கிராமங்கள் உருவாக்கப்பட வேண்டும். இது பற்றி நாம் பேசி வருகின்றோம். ஆனால், இன்னும் அவ்வாறான ஒரு கிராமத்தைக் கூட உருவாக்க முடியவில்லை - என்றார்.

# 'வணங்கா மண்' உணவுப் பொருள்கள் இன்று இலங்கை வந்து சேரும்

## பொறுப்பேற்கிறது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கொழும்பு, ஜூலை 09

'கப்டன் அலி'(வணங்காமண்) கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினால் இன்று இலங்கைக்கு கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பொருள்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு, அவை வவுனியா முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகவியாளர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடொன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர் எஸ்.எச்.நிமால்குமாரின் தலைமையில் இடம்பெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப் பட்ட விவரங்கள் வருமாறு:-

'கப்டன் அலி' கப்பலில் வந்த பொருள்கள், 'எம்.வி. கப்டன் கொலாராடோ' என்னும் சரக்குக் கப்பலில் ஏற்றப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்காக நாளை அதாவது (இன்று) இலங்கையை வந்தடையும். இந்த நிவாரணப் பொருள்களின் பகிர்ந்தளிப்பு இலங்கை அரசின் அதிகாரிகளின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும்.

531 பெட்டகங்களைக் கொண்ட மனிதாபிமான நிவாரணப் பொருள்கள் மற்றும் முதலுதவிக்குத் தேவையான பொருள்கள் இதில் அடங்குகின்றன.

அத்துடன் அரிசி, மா, சீனி, பருப்பு, ரின்மீன், தேயிலை, பிஸ்கட், குழந்தைகளுக்கான பால்மா, உலர் உணவுப் பொருள்கள் உட்படப் பல உணவுப் பொருள்களும் மற்றும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான மருந்துப் பொருள்களும் இந்தக் கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

இந்த நிவாரணப் பொருள்கள் இலங்கைக்கு வந்தவுடன் அவற்றை வவுனியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.



சி.ஐ.டியினரால் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வன்னி அரச வைத்தியர்கள், தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது... (இது தொடர்பான செய்தி முதலாம் பக்கத்தில்)

# நாட்டில் பன்றிக்காய்ச்சலால் இதுவரை 25 பேர் பாதிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை திரும்பிய மற்றொரு பெண்ணுக்கும் சிறுமிக்கும் பன்றிக்காய்ச்சல் நோய் பீடித்திருந்தமை வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறுதிசெய்யப்பட்டுள்ளது எனக் கொழும்பு தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு விசேட வைத்திய நிபுணர் கீதாணி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கை திரும்பிய 33 வயதுப் பெண்ணுக்கும் அமெரிக்காவிலிருந்து வந்த 14 வயதுச் சிறுமிக்கும் இந்நோய் பீடித்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இருவரையும் சேர்த்து இது வரை இலங்கையில் 25 பேர் பன்றிக் காய்ச்சல் நோய்க்கு இலக்காகியுள்ளனர். அவர்களுள் 22 பேர் பூரண சுகமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறி விட்டனர் என ஐ.டி.எச். வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அனுர சேனாநாயக்க கூறினார்.

தற்சமயம் மூன்று நோயாளிகள் மட்டும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரியவருகிறது. (சி)

# இரண்டு அமைச்சுகளுக்கு நிதி வழங்கும் பிரேரணை சபையில் நேற்று நிறைவேறியது

கொழும்பு, ஜூலை 09

இரண்டு அமைச்சுகளுக்கு 986 கோடி 64 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கான குறைநிரப்புப் பிரேரணை ஒன்று நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

நிதி திட்டமிடல் அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக தகவல்கள் அமைச்சு ஆகிய இரண்டு அமைச்சுக்களுக்கே இந்த நிதி வழங்கப்படுகின்றது.

அதன்படி நிதி திட்டமிடல் அமைச்சிற்கு 35 கோடி ரூபா மற்றும் 150 கோடி ரூபா என இரண்டு கட்டங்களில் வழங்கப்படவுள்ளன.

அடுத்ததாக ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சுக்கு 801 கோடி 64 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது.

இந்த அமைச்சுகளுக்கு இந்த வருட வரவு -செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக மேற்படி நிதி ஒதுக்கப்படுகின்றது.

இந்தக் குறைநிரப்புப் பிரேரணையை பிரதி நிதி அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய நேற்றுக்காலை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். (அ-சி)

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை இன்னும் சில தினங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பார் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## சவூதிஅரேபிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பொருள்கள் அடங்கிய 100 மெற்றிக் தொன் எடையுள்ள நிவாரணப் பொருள்களை அரச அதிகாரிகள் நேற்று பொறுப்பேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 33 கோடி ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்க சவூதி அரேபியா முன்வந்துள்ளது. இந்த உதவியின் இரண்டாவது தொகுதியான மேலும் 100 மெற்றிக் தொன் எடைகொண்ட உதவிகள் விரைவில் விமானம் மூலம் இலங்கை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நகரில் சி.டபிள்யூ.ஈ. நிறுவனக் கிளையை ஆரம்பிப்பது குறித்தும் அவர்கள் ஆராய்வர்.

அமைச்சர்களுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நிகழ்வுகளில் கலந்து கொள்வார். (அ-1)

## இந்திய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட பின்னர் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு சென்று வழிபாட்டில் கலந்து கொண்டார்.

நேற்றுப் பிற்பகலில் பருத்தித்துறை சாரதா ஆச்சிரம நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு திரும்பினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை கோப்பாயில் உள்ள நலன்புரி நிலையத்துக்கு சென்ற தூதர் அங்குள்ள நிலைமையை அவதானித்தார்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் தனக்கு உடன் அறிவிக்குமாறு அமைச்சர் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

நாட்டில் பயங்கர வாதச் செயற்பாடுகள் துடைத்தெறியப்பட்டுள்ள நிலையில் எமது மக்கள் மத்தியில் அநாவசிய பதற்ற நிலையை உருவாக்கும் நோக்கில் சில விஷமிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது. பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி இவ்வாறான செயற்பாடுகளை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புவழங்கி, இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தனக்கு உடனுக்குடன் அறிவிக்க முன்வரவேண்டும்.

அண்மையில் யாழ். குடாநாட்டில் பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவம் உட்பட சிற்சில சம்பவங்கள் மக்கள் மத்தியில் மீண்டுமொரு குழப்ப நிலையை உருவாக் கும் நோக்கில் சமூக நலன் சாராத சில விஷமிகளால் திட்டமிட்டுச் செயற்படுத்தப் பட்டு வருவுதாகத் தெரிய வருகிறது- என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
2009 A/L பரீட்சைக்கு
தோற்றும் மாணவர்களுக்கான
உயிரியல் கருத்தரங்கு
காலம் :- யூலை 11,12,13 ஆம் திகதிகளில்
நேரம் :- காலை 8.00 - 10.30
சுப்பிரமணியம் பொன்திவாகரன்

G.A.Q. பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* 2010ஆம் ஆண்டுக்கான பதிவு திகதி பல்கலைக்கழகத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.
* பதிவு முடிவு திகதி 20.07.2009
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தின் ஊடாக நடைபெறுகின்றன.
* புதிய பிரிவுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
குறிப்பு :- 1st in Com, B.Com part I,G.A.Q. யாழ்.
பல்கலைக் கழகம் புதிய ஆண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
விவரங்களுக்கு: S.அருள்நங்கை (நிர்வாகி) புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
O/L DAY CLASS பழைய பாடத்திட்டம் ஆரம்பம்:- 10.07.09 (8.30)
O/L EVENING CLASS இற்கு PAPER CLASS
SCI. :- திரு.N.தேவா
Math. :- திரு.விக்கி, திரு.ரூபன்
ஆரம்பம்:- 11.07.2009 (12 a.m.)

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவில்
D.S.I. ரயர், ரீயூப், RANPA பாதணிவகைகள், றபர் தயாரிப்பான பூச்சாடிகள், தாச்சி (மேசன்)கள் என்பன மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு : பூச்சாடிகள் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு :- D.S.I., RANPA AGENT
No.13, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
T.P :- 021 222 7621

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org